உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 33 | ஆனந்த - ஆடி - 10—8—74 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## சுதந்திரத் திருநாளில் ஒரு சிந்தனை

கட்டுப்பட்டு வாழ்வதற்கு எந்த உயிரும் விரும்புவதில்லை. "சுதந்திரமாக வாழ வேண்டும்; சுதந்திரமாகத் திரிய வேண்டும்; சுதந்திரமாக இன்பம் நுகர வேண்டும்" என்றே எல்லா உயிர்களும் விரும்புகின்றன. கூண்டுக்குள் வளர்க்கப் படும் கிளிக்குப் பாலும் பழமும் தந்து மனிதன் மகிழ்கின்றான். ஆனால் கிளிக்கோ அடைபட்டுக் கிடக்கும் நிலையில் அந்தப் பாலும் பழமும் இனிப்பதில்லை. "எப்போது வானவெளியில் பறந்து திரியலாம், எப்போது சோலைக் கிளைகளில் சுதந்திரமாக உலவலாம், எப்போது தன் இனத்தோடு ஆடிப்பாடித் திரியலாம்" என்றே கிளி கருதுகிறது. வாய்ப்பு வரும்போது சுதந்திரமாகப் பறந்து திரிந்து ஆனந்தம் அடைகிறது. ஆம்! சுதந்திரமாக வாழும் வேட்கை எந்த அளவுக்கு உயிர்களிடம் உள்ளது என்பதற்கு இது நல்ல சான்று.

மனிதன் சுதந்திரமாக வாழவேண்டும் என்று எண்ணும் எண்ணம், அரசியல் அடிமைகளாக வாழக்கூடாது என்று கருதும் கருத்து இன்று நேற்றுத் தோன்றிய ஒன்று அன்று. கி. பி. ஏழாம் நூற்றாண்டில், பல்லவ மன்னனது அழைப்பிற்கு, நாமார்க்கும் குடியல்லோம்" என்று திருநாவுக்கரசர் மறுத்துரைத்துப் பாடிய மறுமாற்றத்திருத்தாண்டகம், தனி மனிதன் உலகியல் வாழ்வில் அரசியல் அடிமையாக வாழ விரும்பாத கோட்பாட்டிற்கு முதற்சான்று என்று மொழிவது தவறாகாது. இந்தக் கோட்பாடே புதுமைக் கவிஞர் பாரதி வாக்கில்,

"பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் — பரி
பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்"

என்று உணர்ச்சி வேகமும் புதிய எழுச்சியும் பெற்று மலர்ந்து நிற்பதைக் காண்கின்றோம்.

சென்ற சில நூற்றாண்டுகளில், வல்லரசுகளின் "காலனி" நாடுகள் என்று கருதப்பட்ட பல நாடுகளில் சுதந்திரவேட்கை பெருகி எழுந்தது; முறுகி வளர்ந்தது; சுதந்திரக் கனல் சுடர் விட்டது; அடிமைப்பட்டுக் கிடக்க விரும்பாத நாடுகள் பல வீறு கொண்டெழுந்தன. "நம்மை நாமே ஆள வேண்டும்; பிறர் அடக்குமுறை வேண்டா; சுதந்திரம் நமது பிறப்புரிமை" என்ற வீரவாசகங்களுடன் கிளர்ந்தெழுந்தன; விடுதலை பெற்றுச் சுதந்திர வாழ்வு பெற்றன. எழுச்சி பெற்ற நாடுகளின் சுதந்திர தாகத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்று கண்ட பல வல்லரசுகள் தாமே உரிமை வழங்க முந்திய நிலையையும் வரலாறு காட்டக் கண்டோம்.

நம் இந்தியப் பெருநாடு உலகில் விடுதலை பெற்ற நாடுகளில் ஒன்றாக விளங்கத் தொடங்கிய ஆண்டுகளில் பெற்றிருக்கும் நன்மைகள் பல; சுதந்திரத்தைப் பெற நம்நாடு நடத்திய அறப் போராட்டத்தை உலகம் வியந்து நோக்கிற்று; சாத்துவிகப் போராட்டம் என்று சரித்திரம் வருணித்தது; 'கத்தியின்றி ரத்தமின்றி வந்த தரும யுத்தம்' என்று கவிஞர் கவிதைப் பண் இசைத்தனர். "சூரியன் அத்தமிக்காத நாடு" என்று கூறப்பட்ட வெள்ளையர் வீரத்தை, நம்நாடு அமைதி வழியில் புறங்கண்டது; அடிமை விலங்கு உடைபட்டது: இந்திய அன்னை புதிய முறுவல் பூத்தாள்: சுதந்திர பாரதம் உருவாயிற்று. மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் அரசியல் அமைப்பு மலர்ந்தது.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்க ஒவ்வோர் ஆண்டும் இந்திய மகன் உறுதி எடுத்துக்கொள்ளும் சுதந்திரத் திருநாளும்

வருகிறது. அதனைச் செயற்படுத்தும் அருந்திறனை இந்தியப் பெருமகன் எய்துதல் வேண்டும். தனி மனிதன் ஒவ்வொருவனுக்கும் சுதந்திரம் உண்டு. அரசியற் சுதந்திரம் தனிமனிதன் சுதந்திரத்தைப் பாதிக்கலாகாது. தனி மனிதன் சுதந்திரம் பிறன் ஒருவன் சுதந்திரத்தைப் பாதிக்கக்கூடாது. அவரவர் உடைமைகளை அவரவர் பாதுகாக்கும் உரிமை பறிக்கப்படக் கூடாது. தான் விரும்பும் கடவுளை வழிபடும் சுதந்திரம், தான் விரும்பும் சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரம் ஆகியவற்றில் பிறர் குறுக்கீடு கூடாது 'எனக்குச் சுதந்திரம் உண்டு' என்று கூறிக்கொண்டு சாலையில் குறுக்கே நின்றுகொண்டு போக்குவரத்துக்குத் தடை செய்வோரைப் புத்திசாலிகள் என்று கூறிட முடியுமா? "எனக்குச் சுதந்திரம் உண்டு" எனக் கூறிக்கொண்டு, இன்னொருவரின் தனி உடைமையைப் பறித்துக் கொண்டு அநுபவிக்க முயல்வோரை அறிவுடையவர் என்று கூற முடியுமா? "எனக்குச் சுதந்திரம் உண்டு" என்று முழங்கிக் கொண்டு இன்னொருவரின் இனிய வாழ்வைப் பலாத்காரப் போக்கில், வன்முறைநெறியில் பிடுங்கிக் கொள்வோரை, பிடுங்கிக் கொள்ள முயல்வோரைப் பேரறிவு படைத்தவர் என்று கூற முடியுமா?

ஒரு சுதந்திர நாட்டில், ஒரு சுதந்திர அரசியலமைப்புள்ள தேசத்தில், தனி மனிதர் சுதந்திரமும் நாட்டின் பொதுச் சுதந்திரமும் ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்தும் சென்றால் தான் பாராட்டத்தக்க நிலையில் அது விளங்க முடியும். அவரவர் வாழ்விலும் அமைதிவழி, இன்பம் மலர்ந்திட அவரவரும் பாடுபட்டு உழைத்திடல் வேண்டும். அந்த உழைப்பே, நாட்டின் பொதுநல நல்வாழ்விற்கு அடிப்படையாக இருக்கும். ஆம்; சுதந்திரத் திருநாளன்று ஒவ்வொரு இந்தியக் குடிமகன் உள்ளத்தும் வேரோட வேண்டிய விழுமிய கருத்து இது; சமய ஏடான "ஞானசம்பந்தம்" இந்தக் கருத்தைத் தக்க சமயத்தில் நினைவில் வைக்க விரும்புகின்றது.

அவரவர் கடமைகளை வழுவாமல் இயற்றிவருதல் வேண்டும்; அவ்வாறு வழுவாத கடமையுணர்ச்சியே சீரிய உரிமையைப் பெறுதற்குத் துணைபுரிவதாகும்; கடமையைப் புரியாமல் உரிமைக்குமட்டும் கைநீட்டுவது சுதந்திர நல்வாழ்விற்குப் பெருமை கூட்டுவது ஆகாது; "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று, கடமைக்கு வித்திட்டு "தன்கடன் அடியேனையும் தாங்குதல்" என்று உரிமைக்கு வேலியிட்ட அப்பரடிகளார் அருள்வாக்கினைச் சமயஉலகம் என்றும் மறவாது குறிக்கொண்டு நிற்கின்றது.

பெற்றுள்ள சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் நல்வாழ்வு நெறிகளில் இந்தியக் குடிமகன் சிந்தனை எப்போதும் நிலைத்து நிற்றல் வேண்டும். இமயமுதல் குமரி ஈறாக இப்பெருநாடு ஒரேபண்பாடு, ஒரே தேசியஉணர்வு அடிப்படையில் இணைந்து நிற்கும் சிறப்புடையது. நதிகள், மலைகள் முதலியவற்றால் பிரிக்கப்பட்டிருந்தாலும், பேசும் மொழிகளால் பிரிக்கப்பட்டிருந்தாலும், இந்தியச் சிந்தனை ஒன்றே ஒன்றுதான். ஆத்மீக அடிப்படையில் ஒன்றுபட்ட உணர்வு இப்பெருநாட்டின் ஆதார சுருதியாக அமைந்திருக்கின்றது. மனிதனை மனிதன் ஆத்மீக நோக்கில் பார்த்தலும், ஆத்மீக நெறியில் இணைந்து நிற்றலும் வேறெந்த நாட்டிலும் காணக் கிடைக்காத நல் இயல்புகள். தார்மிக சிந்தனையும், தார்மிகச் செயலாக்கமும், தார்மிக நல் வாழ்வுமே இந்தியக் குடிமக்களை உலக அரங்கில் தனித்தன்மை பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்திருக்கின்றன என்று கூறுவது மிகையாகாது.

இந்தியப் பொருளாதார நெறியில் 'ஆத்மீக மனோபாவம்' அடிப்படையாக நின்றால், 'மனிதாபிமான நோக்கு' அடிப்படையாக நின்றால், இன்று பரவலாகக் காணப்படும் 'பணவீக்கம்' கட்டுப்படும் என்பது உறுதி. உலக நல்வாழ்விற்காகத் தவம் பெருக்கும் அருளாளர்கள் உள்ளத்துத் தோன்றும் உயர்நோக்கு இதுவேயாகும். இந்த ஆண்டுச் சுதந்திரத் திருநாள் சிந்தனையாக இதனை ஒவ்வோர் இந்தியக் குடிமகன் இதயத்திலும் நாட்டுவதில் "ஞானசம்பந்தம்" பெருமை கொள்கின்றது.

## இறைவன் கருணை

ஒரு மரக்கிளையில் புறாக்கள் இரண்டு அமர்ந்தன. வேடன் ஒருவன் அவற்றைக் குறிவைத்துக் கணைதொடுக்க வில்லை வளைத்தான். இதற்கிடையே புறாக்களைக் குறிவைத்து இராசாளி என்ற பறவை வானில் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தது. இரண்டு இடையூறுகளையும் அறிந்த புறாக்கள் இருக்கவும்முடியாமல் பறக்கவும்முடியாமல் இடர்ப்பட்டு இறைவனை எண்ணித் தொழுதன. இறைவனருளால் ஒரு பாம்பு புறாவைக் குறிவைத்த வேடன் காலைக் கடித்தது. பாம்பு கடித்த பதட்டத்தில் வேடன் குறிவைத்த கணை தவறி உயரே பறந்த இராசாளியைக் கொன்றது. இரண்டு இடையூறுகளிலிருந்தும் அப்புறாக்கள் தப்பித்து இறைவன் கருணைக்கு நன்றி கூறி மகிழ்ந்து பறந்து சென்றன.

— குமரேச சதகம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பின்னலூர் ஸ்ரீ இராமலிங்கேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு

**யாகசாலை வழிபாட்டிற்கு எழுந்தருளிய காலை அறங்காவலர்கள், அன்பர்கள், பக்தர்கள் வணங்கி வரவேற்றபோது**

வழங்கியருளிய

# ஆசியுரை

**அனுபூதி பெற :**

சைவர்கள் சைவ சமயக் குருபீடங்களாகிய ஆதீனங்களுடன் அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அப்படித் தொடர்பு கொள்வது சமய தத்துவ விவரங்களை மக்கள் புரிந்து நன்னெறியில் நடக்கப் பெருந்துணையாகும். எப்போதோ ஓர் மரியாதைக்காகப் போய்ப் பார்க்கவேண்டும் என்று பார்ப்பதால் நலம் அடைய முடியாது. பள்ளியில் பயில்கின்ற மாணவன் என்றோ ஒருநாள் பள்ளிக்குச் சென்றுவந்தால் அவனது கல்வி வளம் எவ்வாறு பெருக முடியாதோ அதேபோலத்தான் என்றோ ஒருநாள் வருவோரும் நன்மைகள் பெற முடியாது. அருள் நிலையங்களாகிய ஆதீன மடாலயங்களிலும் ஆலயங்களிலும் இடையீடில்லாத தொடர்பு கொண்டிருப்பவர்கள் பல வகையிலும் சமய நுட்பங்களைத் தெரிந்து அனுபூதியும் அமைதியும் கைவரப் பெறுவர்.

இவ்வகையில் பின்னலூர் வாகீசம்பிள்ளை அவர்கள் நமது ஆதீனத்துடன் பல்காலும் தொடர்புகொண்டுவருவது பாராட்டற்குரியதாகும். அவர் அரசியலில் செய்த தொண்டைவிடச் சிறிது காலமாக ஆன்மீக இயலில் பணி புரிவதை மிக மிகப் பாராட்டுகிறோம். சிதம்பரம் ஆலயத்தில் ஆயிரத்தெட்டு வில்வ மரங்களைப் பயிர்செய்து கொடுத்திருப்பதும் பாராட்டற்குரியது.

ஆதீனங்களுக்கும் ஆலயங்கட்கும் மற்றும் பிற இடங்கட்கும் ஆயிரத்திற்கு மேற்பட்ட வில்வக் கன்றுகள் அனுப்பியதும் சிறந்த சிவப்பணியாகும். இப்போது தமது முன்னோர்கள் தம் குடும்பக் கோயிலாகக் கட்டிய இராமலிங்கேசுவரர் திருக் கோயிலைப் 'புதுப்பித்துக் குடமுழுக்கும் சிறப்பாகச் செய்ய ஏற்பாடு செய்திருப்பது அவர்தம் தெய்வ பக்தியையும் கடமை உணர்ச்சியையும் புலப்படுத்துகிறது.

வரவேற்புரையில் நம் அன்பர் கனகசபை பிள்ளை அவர்கள் சிந்தனைக்குரிய பல கருத்துக்களை வெளியிட்டார்கள். அக் கருத்துக்களில் சிலவற்றை நாம் விரிவாகச் சிந்திப்போம்.

## கடமையும் உரிமையும் :

நாடு சுதந்திரம் பெற்றால் மட்டும் போதாது. சுதந்திரம் பெற்ற மக்கள் ஒவ்வொருவரும் நாட்டின் நலத்திற்காக அவரவர் கடமையைச் சரிவரச் செய்தல் வேண்டும். கடமையை உணர்ந்து கடமையைச் செய்யும் நாடுதான் அனைத்து வளங்களும் கொழிக் கும் நாடாகும். அவரவரும் தம்தம் கடமைகளைச் செய்யத் தவறினால் நாடு முன்னேற்றமடையாது. எனவே அவரவரும் கடமையைச் செய்வதிலேயே நாட்டமாயிருத்தல் வேண்டும். ஆனால் பெரும்பாலோர் கடமையைச் செய்ய மறந்துவிடுகிறார் கள். அப்படிச் செய்யாதவர்களை அவரவர்க்குரிய கடமையைச் செய்யச்செய்வதே அரசின் கடமையாகும். இதனை ஒரு புறநானூற்றுப் புலவர்பெருமாட்டியார், அழகுற அறிவிக்கின்றார்.

'மகனைப்பெற்றுப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிவளர்த்தல் ஒரு தாயின் தலையாய கடமை. அம்மகனை நற்பண்புகளாலும் கல்வியாலும் நிறைந்தவனாக்கி ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோனாக்குதல் தந்தையின் தலையாய கடமையாகும். அம் மகன் போர்க்களம் சென்று போர் செய்து நாட்டுப்பணி செய்ய வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குத் தலையாய கடமையாகும். இங்கு ஒரு தொழிலை மட்டும் கூறியிருந்த போதிலும் அனைத்துத்தொழிலாளர்களது கடமைகளையும் இதன் வாயிலாக அறிவித்துள்ளார். நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது (நிற்கச் செய்வது) வேந்தனது தலையாய கடமையாகும். வாளைக் கையிலேந்திப் போர்க்களம் சென்று பகைவரது களிற்றி யானைகளைக் கொன்று வெற்றியோடு மீள்வது ஆண்மகனது தலையாயகடமை, என்றகருத்துக்களை' புறப்பாட்டின்மூலம் பொன் முடியார் என்னும் புலவர் பெருமாட்டியார் ஈராயிரம் ஆண்டு

களுக்கு முன்னர் நாட்டு மக்களது அனைவரது கடமைகளையும் உணர்த்தியுள்ளார். ஒவ்வொருமனிதனுக்கும் உரிய கடமையைச் சொன்னாரே தவிர கடமையிலேயே உரிமையும் அடங்கியிருப்பதால் உரிமையைத் தனித்துச் சொன்னாரில்லை. பாடலைப் படித்துப்பார்ப்போம்.

" ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவா ளருஞ் சமம்முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே "

மற்றொரு புலவராகிய பிசிராந்தையாரது பாடலும் இப் பாடற் கருத்துக்கு அரண் செய்வதைக் காணலாம். மனித சமுதாயம் நரைதிரை மூப்புக்களினால் நலிவு படாமல் என்றும் இளமையோடும் அழகோடும் வாழவேண்டுமானால் அவரவரும் நல்லனவாகிய கடமைகளைச்செய்தும் அல்லனவாகிய தீமைகளைக் களைத்தும் வாழ்தல் வேண்டும்.

" யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதிராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன்தலை
ஆன்றவிந்தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழுமூரே ".

கடமை என்றவுடன் உரிமை பறிபோய்விட்டது என்று எண்ணத் தோன்றும். அவரவரும் கடமையைப் பூரணமாகச் செய்தால் உரிமை தானே கிடைக்கத்தான் செய்யும். தாய் தந்தையர் செய்யும் கடமை பிள்ளைகளுக்கு உரிமையாகிறது. பிள்ளைகள் செய்யும் கடமை தாய்தந்தையர்களுக்கு உரிமையாகிறது. மனைவி செய்யும் கடமை கணவனுக்கு உரிமையாகிறது. கணவன்செய்யும் கடமை மனைவிக்கு உரிமையாகிறது. மாணவன் செய்யும் கடமை ஆசிரியருக்கு உரிமையாகிறது. ஆசிரியர் செய்யும் கடமை மாணவருக்கு உரிமையாகிறது. முதலாளியின் கடமை தொழிலாளிக்கு உரிமையாகிறது. தொழிலாளி கடமை முதலாளிக்கு உரிமையாகின்றது. அரசின் கடமை குடிமக்களுக்கு உரிமையாகிறது. குடிமக்கள் கடமை அரசுக்கு உரிமையாகிறது.

அவரவரும் கடமையைச் சரிவரச் செய்தால் உரிமைக்குரலுக்கு ஏது இடம்? அவரவரும் செய்கின்ற கடமையே அவரவருக்கும உரிமையை நல்குகின்றது. இதனுலேயே கீதையில் "கண்ண பிரான் கடமையைச்செய்; உரிமையில் பற்றுவையாதே" என்ருர்.

இதனையே நமது அப்பர் சுவாமிகளும் இறைவனின் கடமையையும் மனிதனின் கடமையையும் இணைத்துக் கூறியுள்ளதைக் காணலாம்.

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்கின்ருர்.

### சமய பாட போதனை ;

அரசின் கடமைகள் பலவற்றுள்ளும் கடமையை உணராத மக்களுக்குக் கடமையை உணர்த்தி செயல்படுத்துவது தலையானது. அவற்றில் ஒன்று, கல்வி நிலையங்களில் சமய ஒழுக்க நீதி போதனைகளைக் கட்டாய பாடமாக நிகழ்த்துவது. இதனுல் சமயங்களிடையே சச்சரவுகள்-சண்டைகள் வரும் என்று சொல்லக்கூடும். எல்லாச் சமயங்களுக்கும் அவ்வச் சமயத் தலைவர்களைக்கொண்டே பாடத்திட்டம் வகுத்தும், வகுப்புக்கள் அமைத்தும், பாடங்களைக் கற்பிக்கச்செய்தும், அவ்வச் சமயத்து மாணவர்களை அவ்வச் சமயங்களில் பயிற்சி பெறச் செய்தால் எந்தவகை இடையூறுகளும் ஏற்படமாட்டா. நமது நாட்டு அரசு மதச் சார்பற்ற அரசு. மதச் சார்பற்ற என்ருல் எந்த ஒரு சமயத்தையும் சார்ந்து நடத்தல் கூடாது என்பதே பொருளாகும். சமய உணர்வோ - சமய நம்பிக்கையோ இல்லாதது என்பது பொருளன்று.

சமயச் சார்பற்ற அரசாக இருக்கும் இந்தியப் பேரரசானுலும் சரி, தமிழக அரசானுலும்சரி ஒன்று முதல் பதினென்றும் வகுப்பு வரை அவ்வச் சமயத்தவர்க்குரிய பாடப் புத்தகங்களை அவ்வச் சமய நிலையங்களின் வாயிலாகவே வெளியிடச்செய்து அதனைக் கட்டாய பாடமாக நடத்தினுல், மக்களாட்சி நடைபெற்றுவரும் இந்நாட்டில்; அது மனித குலத்திற்குச் செய்யும் மாபெரும் நற்பணியாகும். இப்பணியைச் சமயச் சார்புள்ள இலங்கை அரசு பல்லாண்டுகளாக நடத்திவருவது குறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்கதும் ஆகும்.

பௌத்த மதத்தை, அரசாங்கச் சமயமாகக் கொண்டுள்ள இலங்கை அரசே, எல்லா மதத்தையும் சமமாக நடத்துகின்ற போது, சமயச் சார்பற்ற அரசாங்கம், கல்வி நிலையங்களிலே சமய பாடத் திட்டம் அமைத்து சமய வகுப்புக்களைச் சிறப்பாக நடத்துதல் மக்களை வாழ்வாங்கு வாழவைக்கும் சிறந்த நெறியாகும். இதனை அரசியல் துறையில் இருப்பவர்களாகிய நம் அன்பர் R. கனகசபைப் பிள்ளை போன்றவர்கள் கவனித்து ஆவன செய்தல் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நலம் பல பயப்பதாகும்.

## இராமலிங்கேசுவரர் :

அரசியல் துறையில் நீண்டகால அநுபவம் உடைய நமது அன்பர்வாகீசம்பிள்ளை தமதுகடமையை உணர்ந்து இராமலிங்கேசுவரர் கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்குச்செய்தல் அவருடைய தலையாய கடமையாகிறது. அதனை உணர்ந்து செயல்பட்டு வரும் அவரைப் பாராட்டுகிறோம். இராமபிரான் சீதாபிராட்டியை மீட்டுவந்தவுடன், "கோடிமாதவங்கள் செய்து குன்றினர் தம்மையெல்லாம்" (இராவணனை) சம்கரித்த தோஷம் நீங்குவதற்காக இராமநாதரை இராமேசுவரத்தில் பூசித்துப் பேறு பெற்றார். அதே மூர்த்திகளை, இராமநாதன், இராமலிங்கம், இராமலிங்கேசுவரர் என்ற பெயர்களில் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் தாபித்து வழிபட்டுவருவதுபோல அமைந்ததே இத்திருக்கோயிலாகும். இராமலிங்கேசுவரர் என்ற திருப்பெயரில் இங்குப் பெருமான் விளங்குகின்றார்.

## குடமுழுக்கு விழா :

திருக்கோயில்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தவறாமல் குடமுழுக்கு விழாச் செய்தல்வேண்டும். மனம், வாக்கு, காயங்களைத் திரிகரணம் என்பர். இம் மூன்றாலும் செய்யப்படும் மந்திரம் கிரியை பாவனை இம் மூன்றும் வழிபாட்டிற்கு முக்கியமானவை.

கோயிலில் திருப்பணி செய்து பிம்பங்களுக்கு (இறையவர் திருஉருவங்களுக்கு) அஷ்டபந்தனம் செய்தல் தெய்வத்தன்மை பிரகாசிக்கச் செய்வதாகும். பிம்பத்திலுள்ள பெருமானைக் கும்பத்திலுள்ள (குடத்திலுள்ள) புனித நீரில் ஆவாகனம் செய்து, தற்காலிகமாக அமைக்கப்பெற்ற கோயிலாகக் கருதப்படும் யாகசாலையில் எழுந்தருளச்செய்து வழிபாடு நிகழ்த்துவர்.

யாகசாலையைக் குடமுழுக்குச் செய்வோரின் தரத்திற்கும், தகுதிக்கும், வசதிக்கும் ஏற்ப அமைத்து, ஆல் அரசு முதலிய சமித்துக்களாலும் பசு நெய்யினாலும் வேள்வி செய்து 2, 4, 6, 8, 10 காலங்களாக வசதிக்கேற்ப சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தி ஓம குண்டத்திலுள்ள எரியில் பொருள்களை இட்டு அவற்றை இறையிடத்தில் சேர்ப்பர். முறையாக யாகம் செய்கின்ற பொழுது இறைவன் அதனை ஏற்றருளி வேள்விமூலம் எழும் ஓமப் புகையினால் நல்ல மழை வேண்டுங்காலத்து மழை பெய்வித்து வளம் சுரத்தல் முதலிய பயனைத் தருகிறான். இதனைத்தரிசிப்பவர் நோயின்மை, நீண்ட ஆயுள் முதலிய இம்மை மறுமைப் பயன்களை பெறுகின்றனர்.

## அஷ்டபந்தனம் :

அஷ்டபந்தனம் சார்த்துவது இரத்தின நியாசம் செய்வது முதலியன தெய்வ சக்தியைப் பெருக்குவதற்காகும். வேத ஆகமம் முதலிய மந்திரங்களைச் சொல்லி திருமுறைகளை ஓதி வேள்வி முதலிய கிரியைகள் செய்து வழிபடுவதால் வருகின்ற தெய்வீக சக்தி, கீழே வீணாகாமல் மேலோங்கச்செய்து, வழிபட வருவோர்க்கும் வெளியிலிருக்கும் அனைத்துயிர்களுக்கும் கருவறையின்மேல் விமானத்திலுள்ள செப்புக் கலசம் வழியாக உலகம் முழுவதும் பரவத் துணைசெய்கிறது. இவ் அஷ்டபந்தனம் இல்லையேல் தெய்வ சக்தி மக்களுக்குக் கிடைக்காமல் வீணாகி விடும்

## அஷ்டபந்தனம் தயாரிக்கும் முறை :

அஷ்டபந்தனம் தயாரிக்கும் முறையையும் நாம் அறிந்து கொள்ளுதல் நலம். கொம்பரக்கு ஒருபங்கு, கருங்குங்குலியம், சுக்கான், வெண்மெழுகு, வெண்ணை,செம்பஞ்சு இவை மும்மூன்று பங்கு, காவிக்கல் முக்காற்பங்கு, சாதிலிங்கம் காற்பங்கு என்ற அளவில் பொருள்களைச்சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து இளமெழுகுபோல் செய்வது அஷ்டபந்தனமாகும். இம்முறையும் நமது ஆதீனத் திருக்கூட்டத்து அடியவருள் ஒருவராகிய சிதம்பரநாத முனிவரால் " நடராச சதகம் " என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது.

கொம்பரக் கொருபங்கு திரிபங்க தேகருங்
குங்கிலிய மூன்றுசுக்கான்
கொண்டமுக் காற்பங்கு காவிக்கல் வெண்மெழுகு
கூறுநவ நீதமூன்று

செம்பஞ்ச தத்தொகை யிலிங்கமே காற்பங்கு
சேர்த்திடித் திளமெழுகுபோற்
செய்வதுய ரட்டபந் தனவிதிய தென்றுமறை
செப்பினை யிலிங்கமாதி
விம்பபீ டத்தணிந் துயர்சம்பு ரோட்சணம்
வியன்பொழுதி லபிடேகமா
விதிசெய வமைத்ததனை கொ லதுபெயர்ந் திடிலரசு
வியனிராச் சியவிநாசம்
செம்பதும வல்லிதன தம்புயநல் விடெனத்
தினமுமக லாதுவாழுஞ்
சிவசிதம் பரவாச சிவகாமி யுமைநேச
செகதீச நடராசனே.

அஷ்டபந்தனம் சார்த்தியபின்னர் செய்யப்பெறும் கும்பா பிஷேகம் என்பது கும்பத்தில் உள்ள நீரை பிம்பத்தில் அபிஷே கித்தலாகும். இத்தகைய கும்பாபிஷேகங்களை வேத ஆகம நெறி முறை வழுவாமல் செய்பவர்களும், கும்பாபிஷேகப் பணி யில் பங்குகொண்டவர்களும், இப்பணிக்கு உதவியவர்களும், கும்பாபிஷேகத்தைத் தரிசித்தவர்களும் எல்லா நலங்களும் பெற்று இன்புறுவர். எனவே அவரவரும் கடமையை உணர்ந்து கடமையைச் செய்தும் – செய்வித்தும் நலம் பல பெற்று நன்கு இனிது வாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவரு ளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமையாதீனம்

### ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம், சீகாழி.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயிலின் தூய்மையும், அமைதியும் என்னை மிகவும் கவர்ந்த அம்சங்கள் ஆகும். தரும புர ஆதீனத்திற்குச் சொந்தமான எல்லாக் கோயில்களுக்கும் இந்த அம்சங்கள் பொருந்தும்.

(ஒ-ம்) பெ. அ. பாஸ்கரன்,
தலைமை தணிக்கையாளர்,
அரசு வணிகத் திட்டங்கள், சென்னை.

12—8—74.

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 22.

# குருநிந்தை கூடாது கூடாது

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

(மலர் 33, இதழ் 3, பக்கம் 216 இன் தொடர்ச்சி)

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' எழுத்து - சீபஞ்சாக்கரம். சீபஞ்சாக்கரத்தின் உண்மைப் பொருளையும் - எண்ணும் முறையையும் - இருக்கு முறையையும் கண்டு காட்டியவன் எவனோ அவனே இறைவன். 'குருவே சிவனெனக்கூறினன்" என்னும் மூலர் மொழியும் இக்கருத்தை நன்கு வலியுறுக்கும்' ஆகவே அத்தகைய குருவை நிந்தனை செய்தல்கூடாது. குருவின் அருளைக்காட்டிலும் அவன் செய்யும் தண்டனையே ஆன்மாக்களின் குணக்கோணலை மனக்கோணலை மலக்கோணலை நீக்குவது என்ற உண்மையை உணர்த்த குருநிந்தகர் எய்தும் துன்பங்களை மொழிகின்றது இப்பகுதி.

குருநிந்தகன் மலத்துள் புழுவாய்ப் பிறந்து ஓவாத துன்பத்தில் அழுந்துவன். சிவனையும் குருவையும் குருபுத்திரரையும் நிந்தை சொன்னவர்கள் முயலகன் என்னும் நோயால் வருந்துவர். ஆசிரியன் இட்ட பணியை மனவிருப்பத்தோடு செய்யாத பேர்கள் எவ்வளவுதான் நீதி சாத்திரங்களை உபதேசித்தாலும் கேட்டுத் திருந்தாத கசடர்கள் ஆவர். அவர்கள் சொற்படி கேட்கும் மாணாக்கர்களைக் கலைத்தவன் ஒந்தி ஆவான். குரு கோபிக்கும்போது தானும் கோபித்தவன் மண்டை நோயால் மடிவன். குருவைக் கொன்றவன் காசநோயால் கதறித் திரிவன். குருவின் முன்னிலையில் குடியால் மயங்கிப் பேசுகின்றவன் சொத்தைப் பல்லனாய்ப் பிறப்பன். பொன்னைத் திருடியவன் சொத்தை நகத்தையுடையவன் ஆவான். குருவின் மனைவியைப் புணர்ந்தவன் கோடரியால் கொத்தப்பட்டு இறந்து மறுமையில் குட்டரோகியாய்ப் பிறப்பான். சிவன் பொருளைக் கவர்ந்த கயவன் பாம்பாகப் பிறந்து கருடனுக்கும் மனிதனுக்கும் அஞ்சி காட்டிலும் மேட்டிலும் தேம்பித் திரிவான். திருமாலை நிந்தித்தவன் ஒந்தியாய்ப் பிறந்து பசியால் மடிவான். நாயுடனும் விரதம் தவறியவனோடும் இழிந்தானோடும் தத்தம் கடமை

யில் தவறியவனோடும் மாதவிடாய் ஆன மகளோடும் பேசி சிரித்துப் பழகுபவன் நீசனுய்ப்பிறப்பன். ஒருவருக்கு ஒரு பொருளை கொடுக்கச் சம்மதித்துப் பின்னர் மறுப்பவன் கருவில் அழிவன். விலங்குகளையும் பறவைகளையும் வலைகட்டியோ கண்ணிவைத்தோ பிடித்துக்கொன்றவன் பிறந்த உடனே இறப்பன். குருவிற்கும் முனிவருக்கும் பெரியோர்களுக்குமாக, சமைத்த பண்டங்களை முதலில் உண்டவனும் அவர்களுக்குக் கொடாமல் தானே புசித்தவனும் வளர்ந்து காளையாய், போகம் துய்க்கும் பருவத்தில் திடீர் என்று சாவான். புலால் உண்டவனும், தோப்பு, துறவு, குளம், குட்டை இவைகளை உடைத்து விட்டவனும் குட்ட வியாதியால் வருந்தி நரகை அடைவார்கள்.

தெய்வயாகம் முதலிய ஐவகை யாகங்களுள் ஒன்றையும் செய்யாது ஒழிந்தவன் மறுபிறப்பில் நரகத்தில் விழுந்து அழுந்துவன் என்ற சொர்க நரக சேடங்களை குமரன் அகத்தியர்க்கு உணர்த்த அவர் மகிழ்ந்து சிவஞான யோகத்தையும் உணர்த்தியருள வேண்ட, அவர் சிவஞான யோகத்தைப்பற்றிய யோகத்தை உரைக்கின்ருர். புண்ணிய பாவங்களுக்கு ஈடாக சரீரம் எடுத்தவர்களைப் புண்ணியவான்கள் ஞானசாரியனை அடைந்து சிவஞானயோகம் பெறும் முறைமையை உணர்த்தும் பகுதியை உபதேசிக்கின்ருர்.

சிவமாவது சிற்சத்தியோடு அனுதேய மலத்தின் நீங்கி அருளிய உருவாய் இருக்கும் பரம்பொருள். ஞானமாவது அப்பரம்பொருளை முன்னர் ஆய்ந்து தெளிந்த ஆசாரியன் மாணுக்கர்க்கு அறிவிப்பது. யோகமாவது தோற்றக் கேடுகளில்லாத பரம் பொருளோடு பேதமின்றி கலந்திருத்தல். ஞானயோகி எனப்படுபவன் கலையாதித் தத்துவக்கட்டுகள் நீங்கத் தனக்கு வேருகாமலும் தன்னுற் சுட்டுணர்வால் அறியப் படாமலும் இருக்கிற பரசிவத்தை ஆன்ம சிற்சத்தி சிறிது விளக்க அப்பரம் பொருளைத் தெளிந்து கண்ட ஆசாரியன் உபதேசிக்க, தானும் தெளிந்து மெய்ப்பொருளை அடைந்தவன். உலகமெல்லாம் மலமறைப்பினுல் சிவதரிசனம் பெருமல் மயங்கிக் கிடக்க தான் ஞானக்கண்ணுல் பரம்பொருளையே பார்த்திருக்கின்ற சிவயோகியை ஒருக்காலும் உலகவர்போல விஷய சுகங்களாகிற பதபதார்த்தங்களைப் பாரான் பரத்தையே பார்த்திருப்பான். அவனுக்கு சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளே முடிக்கு அணியும் கிரீடம். இந்த ஞான யோகத்தை நமக்கு அறிவிப்பனசிவாகமங்கள். அவை காமிகம் முதலான இருபத்தெட்டு. அவைகள் சிவத்தை விளக்குவதோடு புண்ணிய பாவங்களையும் அதன் பயனையும் விளக்கா நிற்கும்.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

**பின்னலூர் அருள்மிகு இராமலிங்கேசுவரர் திருக்கோயில்**

மகாகும்பாபிஷேக விழாவில் 10—7—74 மாலை
எழுந்தருளியபோது
சுவாமிகளின் திருவடிகளைப் பரவிப் போற்றிய

# வரவேற்பு வாழ்த்து

அருளா ரமுதப் பெருங்கடலில்
அடியா ரெல்லாம் திளைத்துருகத்
தெருளார் ஞானம் வழங்கியொளி
திகழுந் தருமை யாதீனக்
குருமா மணியாய் ஐயைந்தின்
மேலும் ஒன்ருய்க் குலவியிவண்
வருமா தவத்தின் பெருந்தகையே
வருக வருக வருகவே.

கண்ணுதலுங் கறைமிடறுங் கரந்தருளி
உயிர்க்குறுதி காட்டும் பண்பால்
அண்ணலார் எழுந்தருள்வர் எனுமுண்மை
அறிவிக்க அருளின் கோலம்
மண்ணின்மிசை நிலைபெறலாம் மாந்தரெலாம்
உய்திபெறக் குருவாய் வந்த
சண்முகதேசிகஞான சம்பந்தர்
திருவடியெம் தலைமேற் கொள்வாம்.

திருஞான சம்பந்தர் திருநாவுக்
கரசர்வளந் திகழாரூரர்
திருவாத வூரடிகள் முதலியநம்
பெருமக்கள் திருவாய் தன்னில்
வருஞானத் திருமுறைகள் மனங்கொண்டே
யிறையருளின் வண்ணங் காட்டும்
குருஞான சம்பந்தர் திருமரபின்
வழிவருமெங் குருவே போற்றி.

திருநாவுக் கரசர்திரு வவதாரஞ்
செய்தருளுஞ் சீர்த்தி வாய்ந்த
திருவாமூ ரெனுந்தலத்தில் அவர்க்குரிய
திருக்கோயில் திகழச் செய்து
வருஞானத் தவமுனிவர் திருத்தொண்டின்
நெறியென்றும் வாழச் செய்தாய்
திருவாருந் தருமைவளர் சண்முக
தேசிகஞானச் செல்வ வாழி.

திருக்குறளே வேதமெனக் கொண்டபெருந்
திருவாளர் திகழும் அன்பே
உருக்கொடிவண் வந்ததென அறம்புரிந்த
கணபதியாம் உரவோர் முன்னுள்
தருக்குலவு பின்னலூர் தனில் இராமேச்
சுரர் உமையோ டமரச்செய்த
திருக்கோயில் பெருஞ்சாந்தி திகழஇவண்
எழுந்தருளும் தேவே போற்றி.

அன்னையினுந் தயவுடையாய் அன்பரெலாம்
திருவருளின் ஆக்கம் பெற்றே
இன்னலகன் றெந்நாளும் இன்புறவே
தவம்புரியும் எங்கள் கோவே
பின்னலூ ரெனும்பதியிற் பெருஞ்சாந்தி
விழாவினிது நிகழும் பெற்றி
மன்னுகவென் றியாம்வணங்க எழுந்தருளி
வந்தனைநின் மலர்த்தாள் போற்றி.

வாழிஇவண் எழுந்தருளும் சண்முக
தேசிகஞான வள்ளல் பாதம்
வாழி இராமலிங்கேசர் பெருஞ்சாந்தி
விழாவினிது காண வந்தோர்
வாழிபின்ன லூர்வாழும் மக்களெலாம்
சிவனருளில் வளர்ந்தெந் நாளும்
வாழியநம் பாரதநா டுலகமெலாம்
பாராட்டும் வளமை பெற்றே.

இங்ஙனம்,

G. வாகீசம் பிள்ளை, ஊர்ப்பெருமக்கள்,
பரம்பரை அறங்காவலர்,
இராமலிங்கேசுவரர் திருக்கோயில். பின்னலூர்.

சொற்பொழிவில் கேட்டது

# கரணி - 4

இப்போது மேனுடுகளில் ஆபரேஷன் மூலம் பல நோய்களைக் குணப்படுத்துவது கண்டு வியப்பு அடைகிறீர்கள். ஆனால் இராமாயண காலத்தில் அனுமான் சென்று வந்த சஞ்சீவி பர்வதத்தில் நான்குவித மூலிகைகள் இருந்ததாகப் புராணம் கூறுகிறது.

ஒடிந்த எலும்புகளையும் நரம்புகளையும் ஒட்டவைக்கும் மூலிகை. இதன் பெயர் சந்தான கரணி.

வயிற்றில் தவறிப்போய்ச் சென்றுவிடும் இரும்பு, ஊசி போன்ற பொருள்களை வெளிக்கொணரும் மூலிகை. இதன் பெயர் விசல்ய கரணி.

இறந்தவர்கள் உயிரைத் திரும்பிப் பெற உதவும் மூலிகை. இதன் பெயர் சஞ்சீவ கரணி.

உடலில் உள்ள தோல்; தீப்புண் போன்றவைகளால் வெண்மையாக மாறினுல் அதை மாற்றிப் பழையபடி தோலைக் கறுப்பாக்கும் மூலிகை. இதன் பெயர் சுவர்ணீ கரணி.

இவை தற்போது இமாலயப் பகுதிகளில் தேடினுல் கிடைக்கும்.

— மதுரை கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் கூறியது.

— கேட்டவர் :- 'சங்கரி புத்திரன்'

நன்றி. — தினமணிகதிர். 26-7-74.

# தமிழ் நாட்டில் சாக்தம்

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

(மலர் 33. இதழ் 8. பக்கம் 397 - இன் தொடர்ச்சி)

12. இவ்வாறு இயங்கும் சக்தியை திரோதாயி சக்தி அல்லது மறைப்பு சக்தியென்று சைவ சித்தாந்தத்தில் சொல்லுவார்கள். பேருண்மை நமக்குப் புலப்படாமல் திரையைப் போட்டு நம் கண்ணை மறைப்பதும் அவள். திரையைக் கிழித்துச் செம்பொருளைக் காட்டுகிறவளும் அவள். மாயா சக்தியாக நின்று நம்மை அறியாமையில் அழுத்திவைக்கிருள், ஞான சக்தியாக நின்று நமக்குப் பேரின்பத்தை நல்குகிருள். அவளுடைய கருணையில்லையென்ருல் நாம் பரதத்துவத்தை அணுக முடியாது. பக்குவம் நமக்கு ஏற்பட்டுவிட்டால், முக்தியை நாம்விரும்பாவிட்டாலும் நம்மை வலிய இழுத்து நமக்கு முக்தியைக் கொடுத்துவிடுவாள். இதை மறக்கருணை யென்று சொல்லுவார்கள்.

> " இருட்டறை மூலே இருந்த குமரி
> குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து
> குருட்டினை நீக்கிக் குணம்பலகாட்டி
> மருட்டி அவனை மணம்புரிந் தாளே "

என்பது திருமந்திரம். நம்மை மிரட்டியும் மருட்டியும் நமக்கு அருள் பாலிக்கிருள் அவள்.

13. அஞ்ஞானத்திலிருக்கும் நாம் ஜடதத்துவத்தை கேவலம் ஜடதத்துவம் என்றே எண்ணுகிறோம். உண்மையில் ஜடமாகத் தோன்றுவதெல்லாம் இறை தத்துவத்தின் வெளியீடுதான். சாம்பல் பூத்த நெருப்பிலே நெருப்பின் சிவந்த நிறமும் வெப்பமும் தெரிவதில்லை, வெண் சாம்பல்தான் தெரியும். ஆனல், ஒரு குச்சியினல் அதைக் கிளறிப் பார்த்தால் சாம்பலுக்கப்பாலுள்ள நெருப்புத் தெரிகிறது. தாய் ஞான சக்தியாக நின்று ஜடதத்துவத்தைக் கிளறிக் காட்டும்போது, நெருப்புருவமாக உள்ளேயிருக்கும் சிவதத்துவம் நம் உணர்வுக்குப் புலப்படு

கிறது. இந்த அரிய உண்மையை அழகோடும் உணர்ச்சியோடும் நந்திக் கலம்பகம் நமக்கு விளக்குகிறது.

"பொருப்பரையன் மடப்பாவை புணர்முலையின் முகடுதைப்ப
நெருப்புருவம் வெளியாக நீறணிந்த வரை மார்பா"

சிவன் வெண்ணீறணிந்து தன் சிவந்த மேனியை மூடிக் கொண்டிருக்கிறான். ஆனால், பர்வதராஜனுடைய குமாரி தன் ஸ்தனங்களின் முகடுகளால் அவனுடைய நீறணிந்த மார்பைத் தைக்கும்போது, அவனுடைய மார்பிலேயிருந்த வெண்ணீறு உதிர்ந்து போகிறது; உள்ளேயிருக்கும் நெருப்புருவம் நமக்குத் தெரிகிறது. உண்மைக்கு அழகும் உணர்ச்சியும் கொடுப்பதற்காகக் காதல் துறையில் வைத்து அதைக் காட்டுகிறார் நந்திக் கலம்பக ஆசிரியர்.

அடையாள பாஷையிலே இவர் சொன்னதை நமக்குப் புரியக்கூடிய வெள்ளைத் தமிழிலே பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் சொல்லுகிறார். இவர் திருநெல்வேலியில் வாழ்ந்தவர். நெல்லையில் கோயில் கொண்டிருக்கும் வேய்முத்தரையும் வடிவம்மையையும் நித்தநித்தம் வணங்கியவர். தகப்பனைக் காட்டிலும் தாய்க்குக் கருணை அதிகம் என்ற உண்மையைத் தன் குடும்ப வாழ்க்கையில் உணர்ந்தவர். தம்முடைய குறைகளையெல்லாம் வேய்முத்தரிடத்திலே சொல்லிச் சொல்லிக் கதறினார். ஆனால், வேய்முத்தருடைய மனம் இளகுவதாக இல்லை. என்ன செய்வது? தாயிடம் முறையிட்டால் தகப்பனிடம் சிபார்சு செய்ய மாட்டாளா என்று எண்ணுகிறார். "அவர் திரிபுரத்தை எரிக்கப் புறப்பட்டுக்கொண்டிருக்கும்போது என்னைப் பற்றிச் சொல்லிவிடாதே, அம்மா, இளக்கமாக இருக்கும் நேரம் பார்த்து நயமாக அவரிடம் என்னைப்பற்றிச் சொல். அப்படிச் சொன்னால், உன் வாயில் இருக்கும் முத்து சிந்தியாபோகும்?" என்று தாயிடத்திலே உருகிக் கேட்கிறார்.

"ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுஉன் அருகிருந்து
நீமுத்தம் தாவென் றவர் கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்
வேய்முத்த ரோடுஎன் குறைகளெல்லாம் மெல்லமெல்
லச்சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோ, நெல்வேலி வடிவம்மையே."

14. பிரபஞ்சம் முழுவதுமே ஆண் - பெண் கோலத்தில், அர்த்தநாரி வடிவத்தில் இருப்பதை அப்பர் அடிகள் கண்டார். அதற்கு முன் கண்டறியாத இந்தக் காட்சியைத் திருவையாற்றில் கண்டு களித்தார்.

" கண்டே னவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன் "

என்று ஆனந்த மேலீட்டில் அவர் ஓலமிடுகிறார். எவ்வாறு கண்டார் ?

" மாதர்ப் பிறைக்கண் ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன் "

ஆண்யானையும் பெண்யானையும் ஜோடியாகப் போவதைப் பார்த்தபோது, அம்மையப்பனின் இரண்டு திருப்பாதங்களுமே அவர் கண்ணுக்குப் புலப்பட்டுவிட்டன.

" கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்துவருவன கண்டேன்,
கண்டேன் அவர் திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன். "

என்றும்,

" வரிக்குயில் பேடையோ டாடி வைகி வருவன கண்டேன் "

" பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன் "

" பைங்கிளி பேடையோ டாடிப் பறந்து வருவன கண்டேன் "

என்றும் சொல்லி, பிரபஞ்சத்தில் எங்குமே, அணுவிலிருந்து பேரண்டம் வரை, சிவனும் சக்தியும் ஜோடியாகப் பிணைந்து பின்னிக் கிடந்த நிலையையுணர்ந்து மகிழ்ந்தார் திருநாவுக்கரசர்.

15. அண்டத்தில் அவர் கண்ட ஆண் - பெண் கோலத்தைப் பிண்டத்திலும் கண்டார்கள் நம் சித்தர்கள். ஒவ்வொரு மனிதனுடைய உடம்பிலும் இவ்விரு சக்திகளும் இணைந்திருக்கின்றன. இடப்பாகத்தில் சக்தியும் வலப்பாகத்தில் சிவனும் இருப்பதைக் கண்டார்கள். மூச்சுப் பயிற்சியின் மூலமாகவும், யோக சாதனங்கள் மூலமாகவும், மந்திரச் சொற்களின் மூலமாகவும் சக்தியைச் சிவத்தோடு இணைத்து, ஆன்மாவைப் பரதத்துவத்திலே ஒடுக்கி முக்தியடைந்தார்கள்.

" வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு கண்மூடித்தழுவி நிற்ப தெக்காலம் "

என்று புலம்புகிறார் பத்ரகிரியார்.

மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி சக்தியை வாலைப் பிடித்து எழுப்பி சஹஸ்ராரத்துக்குக் கொண்டுபோய் அங்கிருக்கும் சிவத்தோடு அணையச் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு செய்தால் முத்தி கிடைக்கும் என்றும் சித்தர்களும் யோகிகளும் நம்புகிருர்கள்.

16. சிவராஜயோகம் என்ற யோக முறையில், ஆறுதாரத்தை ஒப்புக்கொள்ளவில்லை. உடம்பிலே வெட்டாத சக்கரங்கள் இரண்டு இருக்கின்றன. இடப்பக்கத்திலுள்ள சக்கரத்துக்கு சக்தி சக்கரம் அல்லது சந்திரன் என்று பெயர். வலப்பக்கத்திலுள்ள சக்கரத்துக்கு சிவ சக்கரம் அல்லது சூரியன் என்று பெயர் இவ்விரண்டு சக்கரங்களையும், குருவின் துணைகொண்டு, சேர்த்துவிட்டால், முத்தி கிடைத்துவிடும் என்று நம்புகிருர்கள். ஔவையார் குறளில் இதையே,

> " சக்தியாம் சந்திரனைச் செங்கதிரோ னூடுருவில்
> முத்திக்கு மூலம் அது "

என்று சொல்லியிருக்கிறது.

நம் உடம்பிலே அம்மை இருக்கும் இடத்தை மீனுக்ஷி அம்மை பிள்ளைத்தமிழில் குமர குருபரர் குறிப்பிடுகிருர்.

> " ......துவாத சாந்தப் பெருவெளியில்
> துரியங் கடந்த பர நாத
> மூலத் தலத்து முளைத்த முழுமுதலே
> முக்கட் சுடர்க்கு விருந்திடு
> மும்முலையாய், முத்தம் தருகவே "

என்று சொல்லுகிருர்.

நம் உடலிலே அம்மையும் அப்பனும் கூடி விளையாடும் வீடு, அதிசயங்கள் நிறைந்த வீடு என்று கருவூரார் என்ற சித்தர் ஓலமிடுகிருர்.

> " ஓசைமணி பூரமதில் உதிக்கும் வீடு
> ஓகோகோ அதிசயங்கள் உள்ள வீடு
> ஆசுகவி மதுரமது பொழியும் வீடு
> அவனவளும் கூடிவிளை யாடும் வீடே "

என்ருர்.

(தொடரும்)

# "அருமையில் எளிய அழகே போற்றி"

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
புலவர். திரு. ந. ரா. முருகவேள் M. A, M, O L,

( மலர் 33. இதழ் 8. பக்கம் 387 - இன் தொடர்ச்சி )

உள்பொருளாகத் திகழும் கடவுட் பொருள் ஒன்றே, சத்து சித்து ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்பும் கூறும் உடைய தாக மிளிர்கின்றது. இம் மூன்றினையும் ஒருவகையில் அருமை எளிமை அழகு என்னும் சொற்கள் குறிப்பனவாகக் கொள்ளு தல் இயலும். சத்து என்னும் சொல் உள்ளது, உண்மை என்னும் பொருளை உணர்த்தும். உண்மை அருமை வாய்ந்தது என்பது யாவரும் ஒப்புவர். சித்து என்பது அறிவு. 'அறிவுடை யார் எல்லாம் உடையார்' என்றபடி, அறிவிற்கு ஏனைய எல்லாப் பொருளும் எளிமையாவதுடன், அறிவுடையோர் ஏனையோர்க்கு எளிவந்து இரங்கி இன்னருள் புரிவர். ஆதலின் எளிமை என்பது, இங்குச் சித்து என்பதனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆனந்தம் என்பது அழகால் விளைவது. அழகைக் காணும் யாவரும் ஆனந்தம் அடைவது திண்ணம். எனவே சச்சிதானந் தம் என்னும் அழகிய அரும்பெரும் தொடரின் கருத்தினையே, அருமை எளிமை அழகு என்னும் சொற்கள் முறையே குறிக்கும் என்றும் சொல்லலாம்.

## மூவகைத் தொடர்பு :

(4) சைவசித்தாந்தம், இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினை ஒன்றுதல் வேறுதல் உடனுதல் என மூவகை நிலைகளாகக் கூறும். உடலின் உயிர்போல் கலப்பினால் இறைவன் உயிர்களுடன் அவ்வுயிர்களேயாய் நிற்கும் நிலை ஒன்றுதல்;

---

The second is Chit; it is the fact that we know, which relates us to all things through the relationship of knowledge.

The third is Ananda; it is the fact that we enjoy, which unites with all things through the relationship of Love."

— Dr. Rabindranath Tagore,
The Message of the Forest

கண்ணில் அருக்கன் போலப் பொருட்டன்மையால் உயிர்களும் இறைவனும் தனித்தனியே நிற்கும் நிலை வேறுதல்; கண்ணொளியின் ஆன்ம போதம்போல உயிர்க்குயிராதற்றன்மையால் இறைவன் உயிர்களோடு ஒன்றித்து இயைந்து நிற்கும்நிலை உடனுதல்; உயிர்களிற் பிரிந்த இறைவன் வேறாய் நிற்கும் நிலை அருமை; கலப்புத் தன்மையால் இறைவன் உயிர்களேயாய் உயிர்களோடு ஒன்றாய் நிற்கும் நிலை எளிமை; உயிர்க்குயிராகும் தன்மையால் இறைவன் உயிர்களோடும் அவற்றின் நுகர் பொருள்களோடும் உடனாய் நிற்கும் நிலை, அழகு ஆகும். ஓர் அழகுப் பொருளை நாம் கண்டு இன்புறுங்கால், அவ்வழகுப் பொருளிலும் இறைவன் விளங்கியிருக்கின்றான். அவ்வழகினைக் கண்டு நாம் இன்புறுதற்கு நமக்கும் துணை செய்கின்றான். இவ்வாறு இரண்டிடத்தும் இறைவன் உடனாக நிற்கவேண்டி இருத்தலின், அழகு என்பது ஈண்டு உடனாதல் நிலையைக் குறிப்பதாகக் கொள்ளப் பெரிதும் ஏற்புடைத்தேயாகும்.

## சோமாஸ்கந்தம் :

(5) இனி, அருமை எளிமை அழகு என்னும் மூன்றினையும், சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்றினோடும் தொடர்புடையனவாக நாம் முன்னர்க்கொண்ட முறைமையில் வேறொரு கருத்துக் கொள்ளவும் இடனுள்ளது. சச்சிதானந்தம் என்னும் தொடர், சோமாஸ்கந்தம் என்னும் சிவபிரான் திருவுருவைக் குறிப்பதாகக் கொள்வதும் பெரியோர்கள் மரபு.

சோமாஸ்கந்தமூர்த்தம், தமிழ்நாட்டுக்கே தனிப்பெருஞ் சிறப்பாக உரியது. இந்திய நாட்டின் வேறுபிற எந்தப் பகுதிகளிலும் காணப்படாமல், தமிழ்நாட்டில் மட்டுமே தனிப்பெருஞ் சிறப்பியல்பாகச் சோமாஸ்கந்தர் திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. பழமை வாய்ந்த சிவாலயங்களில் சிவலிங்கத்திற்குப் பின்புறமுள்ள கருவறைச் சுவரில், சோமாஸ்கந்தர் திருவுருவம் அழகுற அமைக்கப்பட்டிருத்தல் காணலாம். உலகியல் வாழ்க்கை நலம்பெற வளர்ந்து செழித்தற்கு ஒருவனும் ஒருத்தியும் முறைப்படி மணந்து கோடலும், இனிய நல்ல மக்கட்பேறு எய்துதலும் இன்றியமையாதன. கணவனும் மனைவியும் குழந்தையும் ஆகிய முப்பொருட்டன்மை திகழ்வது, குடும்ப வாழ்வின் அரும்பெருஞ் சிறப்பு.

சிவபெருமான், குழந்தையாகிய ஸ்கந்த மூர்த்தியைத் தமக்கும் உமாதேவியார்க்கும் நடுவே இருக்கச்செய்து எழுந்தருளியிருக்கும் திருவுருவமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனப்படும்.

(ஸ + உமா + ஸ்கந்த) சோமாஸ்கந்த மூர்த்தத்தை அன்புடன், வழிபட்டு வருவோர், கணவனும் மனைவியுமாகிய இல்லறநெறி நின்று இணையிலா இன்பம் துய்த்து, நன்மக்கட்பேறும் குல வளர்ச்சியும் பெற்று, இம்மையிற் சிறந்து வாழ்வர் என்பது சான்றோர் நூல்களின் கொள்கை.

இத்தகைய சோமாஸ்கந்த மூர்த்தம், சச்சிதானந்தம் என்னும் அரிய தொடரின் ஆழ் பொருளை அறிவுறுப்பதேயாகும் இறைவன் சத்து: இறைவி சித்து; முருகன் ஆனந்தம் என விளங்குதலைச் சமய ஞான நூல்கள் சாற்றுகின்றன.

" மல்லல்வளம் கனிந்தபுகழ்க் கமலேசர்
திருவுருவும், வாம பாகத்து
அல்லமர்பைங் குழலுமையாள் திருவுருவும்,
இருவருக்கும் அமுதம் ஆன
கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவும்;
அவ்வுருவாம் குணங்கள் மூன்றின்
நல்உரு ஆதலின் அன்றோ? இவர் அகில
காரணராய் நவில்கின் றூரே "

—குமரகுருபரசுவாமிகள்.

" பொருள்உள சத்து ; நிரந்தரம்
பொருவரும் அதனை அணைந்தவிர்
அருள்உறு சித்து ; நிரம்பிடும்
அதிக மதர்ப்பெனும் இன்பமும்
ஒருமுகம்உற்ற சொலின்கண் ; முன்
உளது சிவப் பொருள் ; நள்ளது
திருவுரு சத்தி; நல்அந்தரம்
திகழ்வது சுப்பிரமண்யமே "

—பாம்பன்சுவாமிகள்.

வேதாகம உபநிடதங்கள் எல்லாம் விதந்து கூறும் சத்து சித்து ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்புகளின் திருவுருவாக விளங்குவதே சோமாஸ்கந்த மூர்த்தம் என்றும்; இஃது ஒரு வகையில் கிறித்துவ சமயத்திற் கூறப்படும் பரமபிதா-தேவ குமாரன் பரிசுத்தஆவி என்னும் முப்பொருள்களின் இயல்புக்கு

ஒத்த தன்மையுடையதாகக் காணப்படுகிறது என்றும் பெரியோர்கள் கூறுவர். (4)

இத்தகைய சோமாஸ்கந்த மூர்த்தத்திற் சிவபிரானைக் குறிப்பது அருமை; அம்பிகையைக் குறிப்பது எளிமை, முருகனைக் குறிப்பது அழகு என்ற சொல். முருகன் என்னும் சொல் அழகன் என்னும் பொருளை உணர்த்துவ தாதல் வெளிப்படை. எனவே அருமை எளிமை அழகு என்னும் மூன்று சொற்களும் முறையே சிவபிரான் அம்பிகை முருகன் என்னும் மூவர் உருவமும் ஒருங்கே இயைந்த சோமாஸ்கந்த மூர்த்தத்தைக் குறித்து; அவரைப் போற்றி வழிபடும் முறையில் அமைந்துள்ளது எனலாம்.

**முடிவுரை :**

இங்ஙனம் நாம் சிந்தித்து ஆராயுந்தோறும் வெளிப்படக் கூடிய சிறந்த பல நுட்பக் கருத்துக்களை, அருமையில் எளிய அழகே போற்றி என்னும் அழகிய தொடர் அறிவுறுத்தி நிற்கின்றது. இனைய பல இனிய தொடர்களையும், சிறந்த பாடல்களையும் கொண்டுள்ள திருவாசகச் செந்தமிழ்த் தெய்வ மறையினை நாம் அனைவரும் தினமும் ஓதி உய்யக்கடவோமாக.

(4) "Our idea of god is Sat - chit - Anandam, symbolsed in the form of Somaskanda (Sa + Uma + Skanda) andi this is the same as God the Father, God the Mother or Holy ghost, and God the Son, and I have quoted in same other place the definition of this terms from Bishop Westcott. God as pure being or Spirit, God as light that links to him all humanity, and God as Love."

— J. M. Nallaswamy Pillai,
Studies in Saiva Siddhantham, p. 139.

# சிவமயம்

"செந்தமிழ்ச்செல்வர்"

**வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,**

1

என்னுடைய நண்பராகிய செட்டியார் ஒருவர் செட்டி நாட்டில் இருக்கிறார். ஒரு சமயம் அவருக்குக் கடிதம் எழுதத் தொடங்கினேன். என் அன்பு முழுவதையும் வெளிப்படுத்தி மெருகிட்டு எழுதினேன். மூன்று பக்கங்கள் நிறைய எழுதிக் கையெழுத்திட்டேன். அவ்வளவு உத்ஸாகத்தோடு எழுதிய கடிதத்தை மீண்டும் படித்துப் பார்க்க எண்ணி முதற் பக்கத்தைத் திருப்பினேன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது!

அந்தக் கடிதத்தை என் நண்பர் பிரித்து முதற் பக்கத்தின் தலைப்பைப் பார்ப்பார்; உடனே பேசாமல் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவார். காரணம் என்ன தெரியுமா? நான் அதில் பிள்ளையார் சுழியும், சிவமயமும் போடாமல் எழுதி விட்டேன்.

ஆகவே, செட்டியாரவர்களின் பார்வை கடிதம் முழுவதும் செல்ல வேண்டுமென்ற சிரத்தையால் கடிதத்தில் பிள்ளையார் சுழியும் சிவமயமுமாகிய தலையலங்காரங்கள் போட்டேன். கடிதம் எழுதுவதற்கு முன்பே போடவேண்டியவற்றை, எழுதிக் கையெழுத்திட்ட பின்புதான் போட்டேன். "இதை நண்பர் இனிமேல் வாசிப்பதில் தடையொன்றும் இல்லை" என்ற திருப்தியோடு அதைத் தபாலில் சேர்த்துவிட்டேன்.

கடவுள் வணக்கம் சொல்லிக் கூட்டத்தைத் தொடங்குவது, காப்புச் செய்யுள் பாடிக் காவியத்தை ஆரம்பிப்பது முதலிய விஷயங்களெல்லாம் ஒரே நோக்கத்தைக் கொண்டவை. கடவுள் காப்பாற்ற வேண்டுமென்று நம்பிக்கையோடு சங்கற்பம் செய்துகொள்வதில் யாரும் குறைந்தவர்கள் அல்ல.

எல்லா நூல்களுக்கும் காப்புச் செய்யுட்கள் இருக்கின்றன. சிலவற்றிற்கு இல்லையென்று சொல்லலாம், அது சிறுபான்மையே யாம். "புறநானூறு" என்ற தமிழ் நூலுக்கு ஒரு காப்பு இருக்கிறது. அந்தக் காப்பையே 'சிவமயம்" என்று சொல்லி விடலாம். அது, நான் எப்படிக் கடிதத்தையெல்லாம் எழுதி முடித்து விட்டுப் பிறகு மேலே பிள்ளையார் சுழி சகிதம் எழுதினேனே அந்தச் சிவமயத்தைப் போன்றதே.

இரண்டாயிரம் வருஷங்கள் என்றால் சரித்திரத்தில் ஒரு பெரிய கால அளவுதான். அந்த இரண்டாயிர வருஷ காலமாக உலகமே தலைகீழாக மாறியிருக்கிறது. எத்தனையோ ராஜ வம்சங்கள் தோன்றி வளர்ந்து அழிந்துவிட்டன. எத்தனையோ நாகரிகங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அவ்வளவு பிரளயத்திலும் புறநானூற்றின் காப்பு, சிவமய விலாஸம், அன்றைக்குப் போட்டபடியே இன்றும் இருக்கிறது.

அந்தப் பழைய காலத்திலே தமிழுக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டதென்றே தோன்றுகிறது. பரம்பரையாக வந்த கவிஞர்களுடைய பாடல்கள் கர்ண பரம்பரையாக உலவிவந்தன. அவற்றில் எவ்வளவோ அழிந்தன. அங்கங்கே சில சில செய்யுட்கள் மனிதர்களின் உள்ளத்தைப் பற்றிக்கொண்டு கிடந்தன. அவற்றை அந்த நிலையிலே விட்டு வைத்தால், நாளடைவில் எல்லாம் போய்விட்டால் என்ன செய்வது என்ற ஏக்கம் புலவர்களுக்கும், புரவலர்களுக்கும் உண்டாயிற்று.

அரசர்கள் உத்தரவிட்டார்கள்; அக்காலத்தில் இருந்த சில புலவர்கள், அங்கங்கே வழங்கிவந்த பாட்டுக்களைச் சேகரித்தார்கள். எல்லாவற்றையும் தொகுத்து வகைப்படுத்த ஆரம்பித்தார்கள். அந்தக் காரியத்தில் உதவிசெய்த புலவர்கள் இயற்றிய செய்யுட்களையும் சேர்த்துக்கொண்டார்கள்.

பாட்டு, பொருள் முதலிய விஷயங்களுக்கு ஏற்றபடி அந்தப் பாடல்களையெல்லாம் வகைப்படுத்தினார்கள். பொருளாலும் அளவு முதலியவற்றாலும் ஒற்றுமையுள்ள பாடல்களைத் தனியே தொகுத்து, தனித்தனிப் புத்தகங்களாக வைத்தார்கள். இவ்வாறு வகைப்படுத்திய நூல்களே இக்காலத்தில் "கடைச் சங்க நூல்கள்" என்று சொல்லப்படுகின்றன.

கடைச்சங்கத்து நூல்களில் மூன்று பிரிவுகள் உண்டு. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற பெயரோடு அவை இருக்கின்றன. பத்துப்பாட்டு என்பது

பத்து நீண்ட அகவல்களை உடைய தொகுதி. பதினெண் கீழ்க் கணக்கென்பது பதினெட்டுப் புத்தகங்களைக்கொண்ட கோவை; அவற்றிற் பெரும்பாலானவை நீதி நூல்களே. மிகப் புகழ் பெற்ற திருக்குறள் அந்தப் பதினெட்டு நூல்களுள் ஒன்று,

எட்டுத்தொகை யென்னும் நூல் வரிசையில் எட்டுப் புத்தகங்கள் இருக்கின்றன; காதலைப்பற்றியும், வீரத்தைப்பற்றியும் உள்ள பாடல்களின் தொகை அவை. புறநானூறென்பது நானூறு பாட்டுக்கள் உள்ள நூல். நேர்மையான காதலைக் கூறுவன ஒழிந்த மற்ற வகையான செய்யுட்களைப் புறப் பொருள் அமைந்த பாடல்கள் என்பது தமிழர் மரபு. புறநானூற்றுப் பாடல்கள் அந்த வகையைச் சேர்ந்தனவே. பெரும்பாலும் போர்ச் செய்திகளை உடைய பாடல்களே அதில் அதிகம்.

இந்த எட்டு நூல்களும் தொகுக்கப்பட்ட பின்பு, ஒவ்வொன்றுக்கும் கடவுள் வாழ்த்து, சேர்க்கப்பட்டது. சில நூல்களுக்குச் சிவபெருமான் துதி முன்னால் சேர்க்கப்பட்டது. சிலவற்றில் திருமால் துதியை வைத்தார்கள். ஒன்றில் முருகக் கடவுள் வணக்கம் இணைத்தார்கள். இப்படி, புத்தக முழுவதும் தொகுக்கப் பெற்ற பிறகு, "சிவமயம்" என்ற விலாஸம் போடப்பட்ட நூலில் ஒன்று புறநானூறு. நான் கடிதம் எழுதி முடித்த பிறகு, தலைப்பில் "சிவமயம்" போட்டதுபோலவே இதுவும் தோற்றுகிறது அல்லவா ?

புறநானூற்றுக்குச் "சிவமயம்" போட்டவர் - காப்புச் செய்யுள் பாடியவர் - பெருந்தேவனார் என்னும் புவலர். அவரே நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு என்னும் நூல்களிலும் விலாஸம் போட்டவர்.

பெருந்தேவன் என்பதை மகாதேவன் என்று இந்தக் காலத்துப் பாஷையிலே சொல்லலாம். அந்த மகாதேவனார் சிவபெருமானாகிய மகாதேவனாரைத் தோத்திரம் செய்த செய்யுள் தான் புறநானூறு என்னும் சங்கநூலின் முதற் பாட்டு.

2

திருமுடியிலே அணிந்த சிறிய மாலையாகிய கண்ணி, கொன்றை மலரால் தொடுக்கப்பட்டது; கார்காலத்திலே தண்ணென மலர்ந்த அதனைக் காணும்போதே, கண் குளிர்கின்றது. அந்தத் திவ்ய ரூபத்தின் திருமார்பிலும் அதே கொன்றை மாலை. ஆனால் அது பெரியது; அதற்குத் தார் என்று பெயர். இப்படிக்

கார் நறுங்கொன்றை மலராகிய கண்ணியைத் திருமுடியிலும், தாரைத் திருமார்பிலும் அணிந்துகொண்டு மகாதேவன் காட்சி தருகின்றான்.

இந்தத் திவ்யமங்கள மூர்த்தியைத் தாங்கிக்கொண்டு நிற்கிறது ரிஷபம். அது தூய்மைக்கு இருப்பிடம்; மாசு மறுவற்ற சுத்த வெண்ணிறமுடையது. அதென்ன? மேலே எம்பிரான் கொடியிலும் அந்த ரிஷபந்தான். மேலும் கீழும் ஒரே நிலை!

பொன்னிறமாகிய கொன்றையின் காட்சிக்கும் தூய வெள்ளிய ரிஷபத்தின் தரிசனத்துக்கும் இடையே ஒரு சிறிய கறுப்பு. அது அப்பெருமான் திருக்கழுத்திலல்லவோ இருக்கிறது? அந்தக் கறுப்பும் அவனுக்கு அழகாகத்தான் இருக்கிறது. அதுமட்டுமா? "அக்கறுப்பு" தான் மறுவாயும் வானோரை உய்யக்கொண்டமையின், வேத கோஷங்கள் செய்யும் அந்தணர்கள் அதைப் பாராட்டுகிறார்கள்; நீலகண்டத்துக்குத் தனியே அர்ச்சனை செய்கிறார்கள்.

இந்த உருவத்தில் ஒரு பாகம் பெண்ணுருவம். எப்பொழுதும் இறைவன் இந்தப் பெண்பாகத்தை வெளிக்காட்டிக்கொண்டிருப்பதில்லையாம். சில காலம் அதைத் தனக்குள்ளே அடக்கி மறைத்து விடுவதும் உண்டாம்.

"சந்திர சூடாய நம:" என்ற சப்தம் காதில் விழுகிறது. ஆஹா! என்ன அழகு! இறைவன் இளம் பிறையைத் தன் நெற்றிக்கு நேரே அணிந்து கொண்டிருக்கிறான். அதன் ஜோதி அவனது நெற்றிக்கே ஒரு சோபையைத் தருகிறது. "அது வெறும் பிறைதானே? என்று யாரும் நினைப்பதில்லை. சிவபெருமான் திருமுடியின்மேல் ஏறி வீற்றிருப்பதற்கு அது எவ்வளவு பாக்கியம் பண்ணியிருக்க வேண்டும்! அதனால்தான் பதினெண் கணங்களும் அதனைப் பாராட்டுகிறார்கள்; வணங்குகிறார்கள்.

அவனது சடாபாரம் ஒரு பெரிய தீர்த்த பாத்திரம். அதற்குள் சர்வலோக ஜீவர்களுக்கும் பாதுகாப்பாகிய கங்காதேவி நுழைந்துகொண்டிருக்கின்றாள். கொன்றையும், சந்திரனும், கங்கையும் வாசம் செய்யும் திருமுடியே அடிக்கடி காட்சி அளிக்கின்றது. அந்தச் சடையாண்டி பெரிய தபஸ்வி: அருந்தவத்தோன்.

* * * *

இந்தக் காட்சியைப் பெருந்தேவனார் காண்கிறார். அதைச் செய்யுளிலே அமைத்துப் புறநானூற்றின் கடவுள் வாழ்த்தாகக் கோத்து உலகிற்கு உதவியிருக்கிறார்.

கண்ணி கார்நறுங் கொன்றை, காமர்
வண்ண மார்பில் தாருங் கொன்றை,
ஊர்தி வால்வெள் ளேறே, சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப;
கறைமிட றணியலும் அணிந்தன்று; அக்கறை
மறைநவில் அந்தணர் வாழ்த்தவும் படுமே;
பெண்ணுரு வொருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்;
பிறைநுதல் வண்ண மாகின்று; அப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே;
எல்லா உயிர்க்கும் ஏம மாகிய
நீரற வறியாகக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே.

---

## திருநீறு அணியும் முறைமை

பத்தியொடு சிவசிவா என்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத் துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதில் ஒழுக
நித்தமு விரல்களால் நெற்றியில் அழுந்தலுற
நினைவாய்த் தரிப்ப வர்க்கு
நீடுவினை யணுகாது தேகம்பரி சுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந் திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவும் இவரையே
சத்தியஞ் சிவனென்ன லாம்
மத்தினிய மேருஎன வைத்தமு தினைக்கடையு
மால்மருக னான முருகா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே.

— குமரேச சதகம்.

# உணர்தலும் உணர்த்தலும்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், செஞ்சொற்கொண்டல்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி

## இறைவனும் உயிர்களும் :

"உலகிடை வாழும் உயிர்கள் தமக்கெனச் சுதந்திரம் அற்றவை; தமக்கென அறிவு அற்றவை; தாமாகச் செயற்படும் திறன் அற்றவை" என்பதும், "அவற்றைச் செயற்படுத்தி ஒளிகாட்டும் முதல்வன் பரம்பொருள் ஆவன்" என்பதும் சைவசித்தாந்தச் செம்பொருள் துணிவுகள். இறைவன் உணர்த்தினால்தான் உயிர்கள் உணர்கின்ற பெற்றி உடையவை என்பதைச் சாத்திர தோத்திர நூல்கள் இனிது விளக்கியுள்ளன. இறைவன் உணர்த்தாவிட்டால் உயிர் உணரும் திறன் அற்றது என்பது பல ஆசிரியர்களால் இனிது விளக்கப் பட்டுள்ளது.

## மெய்கண்டார் வாக்கு :

சிவஞானபோத ஆசிரியரும், சைவசித்தாந்த முதற்பெருங் குரவரும் ஆகிய மெய்கண்ட தேவ நாயனார் உயிர் உண்மை உரைக்கும் தமது மூன்றும் நூற்பாவில் மூன்றும் வரியில் இவ்வரும் பேருண்மையை எடுத்து இயம்பியுள்ளனர். அவ் வழகிய நூற்பா வருமாறு :

"உளது இலதென்றலின் எனதுடலென்றலின்
ஐம்புல னொடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா வியந்திர தநுவினுள் ஆன்மா"

ஆன்மாக்களுக்கும் புறப்பொருளை உணர்த்துவதாகிய தாதான்மிய சக்தியை உடைய முதல்வன் இலக்கணத்தை ஆன்மாக்களின்மேல் வைத்து இந்த நூற்பாவில் ஓதினர் ஆசிரியர் என்பர் சிவஞான முனிவர்.

## பிரமான்மவாதிகளை மறுத்தல் :

'உணர்த்த உணர்தலின்' என்பது இந்நூற்பாவின் ஆறும் அதிகரணம் ஆகும். இது பிரமான்மவாதிகளை மறுக்கும்

குறிப்புடையதாகும். "ஐம்பொறி, முதலிய எல்லாம் சடப்பொருள்கள்; பிரமம் ஒன்றே சித்துப்பொருள். ஆதலின் அதுவே ஆன்மா என்பதே அமையும்; வேறு கோடல் மிகையாகும்" என்பர் பிரமான்ம வாதிகள். பிரமம் எக்காலத்தும் திரிபின்றி அறிந்தாங்கு அறிந்து நிற்கும் சித்தாக உள்ளது; ஆதலின் ஆன்மாவாகப் பிரமத்தைக் கூறுதல் பொருந்தாது என்பது சைவசித்தாந்தக் கருத்து.

சிவஞான முனிவர் உரைநுட்பம்:

உணர்த்த உணரும் இயல்பு உடையது ஆன்மா; இதனுள் "உணர்த்த உணர்தல் எனவே முன் உணராது கிடத்தல் பெற்றும்" என்று எழுதுவர் சிவஞான முனிவர். "அவன் அறிவித்தால் அறிவனென்றறிவிக்க வறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது" என்பது மெய்கண்ட தேவரது வார்த்திகப் பொழிப்பு. பிரமமாகிய இறைவன் அறிந்தாங்கு அறிவன்; ஆன்மா மறந்து மறந்தறியும், ஆதலின் உணர்த்த வேண்டியுள்ளது. இதனை மெய்கண்டார் அழகிய வெண்பாவினால் விளக்குகின்றனர்;

"அறிந்தும் அறிவதே யாயும் அறியாது
அறிந்ததையும் விட்டங்கடங்கி — அறிந்த
எது அறிவும் அன்றுதம் மெய்கண்டான் ஒன்றின்
அதுஅதுதான் என்னும் அகம்"

கருவிகள் எல்லாவற்றோடும் கூடிச் சாக்கிர காலத்தில் விடயங்களை அறியும் இடத்து ஒருங்கே அறியமாட்டாமல் ஒன்றனை அறியும் இயல்புடையது; ஒன்றனை அறியப்புகும் இயல்புடையது; முன் அறிந்த தொன்றினை அறியாது ஒழியும் இயல்புடையது; இவ்வாறு ஒவ்வொன்றாக அறியப்பட்ட பொருளையும் இடையீடின்றி அறியமாட்டாது விட்டு விட்டு ஐந்தவத்தைகளிற்பட்டு அடங்கி மீள அறிந்து வருதல் ஆன்மாவியல்பு ஆதல் கண்கூடாகக் காணத்தக்கது.

இனி, "ஓதியதனை ஓதிய பொழுதே உணர்ந்தும், பலகால் ஓதி உணர்வதாயும் பலகால் ஓதியும் உணராது அங்ஙனம் உணர்ந்ததனையும் மறந்தும், இவ்வாறு ஓதி உணர்ந்தது யாது" என்ற வேறொரு பொருளும் சிவஞான முனிவர் காட்டுகின்றனர். இரண்டு பொருளுமே இவ்விடத்து ஒவ்வொரு வகையிற் பொருந்துகின்றன.

**சிவப்பிரகாசக் கருத்தமைப்பு :**

இவ்வாறு அவத்தைப் பட்டுக்கிடக்கும் உயிர்களுக்குச் சிவனாகிய இறைவன் உணர்த்தும் முறைமையைச் சிவப்பிரகாசத்து ஐந்தாம் சூத்திரம் சில பாட்டுக்களால் சுருக்கமாகத் தெளிவுறுத்து கின்றது. சிவஞானபோதத்தில், "இவ்வான்மாக்களிடத்துத் தமது முதல் உபகாரம் உணர்த்துதல் நுதலிற்று" எனக் கூறப் பெற்ற செய்தியை ஐந்து பாடல்களாற் சிவப்பிரகாசம் உரைக் கின்றது. சிவன் அறிவிக்கவே ஆன்மா புலன்களை அறியும் என்பது இவ்வைந்து பாட்டுக்களில் கூறப்பட்ட பொதுக் கருத்தாகும்.

ஆன்மா எனப்படும் உயிர் பதினெட்டுக் கருவிகளைக் கொண்டு அறியும் இயல்பினது; இக்கருவிகளைக் கூடாமல் ஆன்மா அறியாது. ஆன்மாவைக் கூடாமல் இக்கருவிகளும் அறியமாட்டா. அவ்வாறு ஆன்மாவும் கருவிகளும் தம்மிற் கூடி உணரும்படி இறைவன் செய்வன் என்று உமாபதி சிவம் முதற் பாட்டுள் (63) ஓதுகின்றார்.

ஆன்மாவுக்குத் தனக்கென ஓர் அறிவில்லாமையினால், தானாகத் தத்துவங்களைக்கூடி அறியமாட்டாது. கருவிகள் அறிவற்றவையாதலின் அவை தாமாக ஆன்மாவைக்கூடி அறிய மாட்டா. ஆதலால் இரண்டையும் காட்டிக் காரியப்படுத்துவது இறைவன் உணர்த்தும் முறையாயிற்று என்றனர் அடுத்து. (64) இறைவன் வேறுபாடின்றி நிற்க, அவனுடைய ஞானத்தைக் கொண்டு ஆன்மா அறிவன் என்று கூறவியலாது; ஆன்மா வுக்காகச் சிவன் அறிகின்றானே ஒழிய ஆன்மாவுக்கென்று ஒரு சிற்றறிவும் இல்லை என்றும் கூறவியலாது.

சிற்றறிவாயுள்ள ஆன்மாவைப் பேரறிவாகஉள்ள சிவன் அறிவிக்க அந்த அறிவே ஆதாரமாக ஆன்மா அறிவதாகும் என்பர் பின்னர். (65)

"அவனருளாலே – அவன்றாள் வணங்கி"

என்று மணிவாசகரும்,

"காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"

என்று திருநாவுக்கரசரும் இக்கருத்துக்களை இனிது விளக்கி யுள்ளனர்.

" உணர்த்தில் உணர்வேன் ; உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன் "

என்று குருஞானசம்பந்தர் இரத்தினச் சுருக்கமாக இதனைப் புலப்படுத்தியுள்ளார்.

உலகில் உள்ளவர்கள் ஞாயிற்றின் உதவியை மறந்து தம் செயல்தான் என்று உளம் களிப்பர் ; அதுபோன்று இறைவன் பேருதவியை மறந்து தம் செயல் என்று தருக்கித் திரிவர் என்பர் அடுத்து. (66)

அந்தக்கரணங்கள் நான்கும் ஐந்து பொறிகளும் ஆருயிரின் உதவியில் புலன்களை அறியும் இயல்பின. ஆனால் ஆருயிரால் அறிகின்றோம் என்பதனை அறியமாட்டா. அதுபோன்றே ஆருயிர்களும் சிவன் அறிவிக்க யாவற்றையும் அறியும் ; உணரும் ; சிவனால் அறிகின்றோம் : உணர்கின்றோம் என்பதை அறியமாட்டா. கன்மத்தின் பகுதிகளை அறிந்து கருவிகளைக் கூட்டி அக்கன்மப் பயன்களை நுகரும்படிச் சிவபிரான் செய்தருள்வன். (67) என்று இறுதியாகக்கூறி உணர்த்தும் முறைமையை ஓதி முடிக்கின்றார் உமாபதி சிவாசாரியர்,

முடிவு :

இவ்வாறு பரம்பொருள் உணர்த்தும் முறையும், ஆன்மாக்கள் உணரும் முறையும் ஆகிய சமயதத்துவம் தம் சந்தானசாரியப் பெருமக்களால் இனிது உணர்த்தப்பெற்றுள்ளன. இவற்றைத் தோத்திரப் பகுதிகளாக உள்ள திருமுறைகள் பல்வேறு பகுதிகளில் தெளிவாக்கியுள்ளன. "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது" என்று வழங்கும் பழமொழி இந்த அரிய சமயதத்துவத்தை எவ்வளவு தெளிவாக உணர்த்திவிடுகின்றது !

---

## பூமியில் வைக்கக் கூடாதவை

நல்லமுத்து, முத்துச்சிற்பி, இறைவனுடைய பிம்பம், சிவலிங்கம், சங்கு, தீபம், தெய்வயந்திரங்கள், மாணிக்கம், வைரம், பூணூல், மலர், புத்தகம், துளசி, ஜபமாலை, மலர் மாலை, குடம், தங்கம், கோரோசனை, சந்தனம், அபிஷேக தீர்த்தம் இவை நிலத்தில் வைக்கக் கூடாத பொருள்களாகும்.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னுகரம்
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 33. இதழ் 6. பக்கம் 312 இன் தொடர்ச்சி)

தேனுமுத்திரை :- இதனுல் அமிருதீகரணம் செய்ய வேண்டும் என்ருயிற்று.

मुदंकरोति देवानां द्रावयत्यसुरानपि ।
योदनाद्द्रावणाच्चैव मुद्रेयं परिकीर्त्तिता ॥

முத் என்னும் முதநிலேக்குச் சந்தோஷம் என்னும் அர்த்தம். த்ரா என்னும் முதல்நிலேக்கு வேகமாகப் போகுதல் என்று அர்த்தம். தேவதைகளே சந்தோஷிப்பித்தலாலும் அசுரர்களேத் துரத்துவதாலும் முத்திரை யென்னுங் காரணப் பெயராயிற்று,

பூஜாங்கமாகச் செய்யப்படும் ஸம்ஸ்காரங்கள் பத்து ஆகும். அவையாவன, ஆவாஹனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்ரை பாத்யம், ஆசமனம், அர்க்கியம், புஷ்பதானம் என்பனவாம்.

இரு கையையுமஞ்சலியாகச் சேர்த்து இரண்டு அநாமிகை விரல்களினடிக் கணுக்களில் இரண்டங்குஷ்டங்களேயுஞ் சேர்த்துக் காட்டுவது ஆவாஹனீ முத்ரை, இதையே அதோமுகமாகச் செய்தால் ஸ்தாபினீ முத்திரை. இரு கையையும் முஷ்டியாக முடிக்கொண்டு இரண்டு அங்குஷ்டங்களேயும் உயரத் தூக்குதல் ஸந்நிதானீ முத்திரை. அந்த முஷ்டிகளேயே அங்குஷ்டங்கள் உள்ளடக்கிப் பிடித்தல் நிஷ்டுர என்னும் முத்திரை. இரண்டு முஷ்டிகளேயும் பிடித்து தர்ஜநீ விரல்களே மாத்திரம் நீட்டி மண்டலாகாரமாகச் சுற்றுதல், அவகுண்டந முத்திரை. இரு கை விரல்களேயும் ஒன்ருகக் கோர்த்து அநிஷ்டா நாமிகைகளேயும் மத்தியமா தர்ஜனிகளேயும் பசுவின் முலேபோற் சேர்ப்பது தேனுமுத்திரை ஆகும்.

இருதய மந்திரத்தோடு நமோந்தமாக மூலமந்திரத்தைச் சொல்லி பாத சௌசத்திற்காகப் பாதத்திற்குக் கொடுக்கும் ஜலம் பாத்தியம் எனப்படும்.

ஸ்வாஹாந்தமான மூல மந்திரத்தினுலே ஐந்து முகங்களிலும் கொடுக்கும் ஜலம் ஆசமனமெனப்படும்.

ஸ்வாஹாந்த மந்திரத்தினுலே ஐந்து சிரசுகளிலும் கொடுக்கும் ஜலம் அர்க்கியம் எனப்படும். வௌஷடந்த மந்திரத்தினுலே அறுகு, புஷ்பம் அக்ஷதை முதலானவற்றைக் கொடுப்பது புஷ்ப தானமாகும்.

தைலம் முதலானவைகளால் அபிஷேகம் செய்யவேண்டும்.

तैलैः पिष्टरसादिभिर्गुणरसैर्गव्येन पञ्चामृतै
राज्येनापि पयो दधि मधु स्नाने स्तथे क्षुत्भवैः ।
कुर्यात्पञ्चफलैः पुनः फल रसै,स्सन्नाळि केरोत्भवै
रन्नैर्भस्म सुगन्धि कुंभसलिलै रर्घ्यैश्च संसेचयेत् ॥

எண்ணெய், மாப்பொடி, மஞ்சள்பொடி, நெல்லிமுள்ளிப் பொடி, பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், நெய், பால், தயிர், தேன், கரும்பின்சாறு, ஐந்து பழம், ஐந்துபழரஸம், இளநீர், அன்னம், விபூதி, சந்தணம், கும்பம், அர்க்கியம் என்று முறையாக அபிஷேகம் செய்வித்து, வஸ்திரம் சந்தணம் புஷ்பம் இவைகளால் நன்ருக அலங்காரம் செய்து தத்துவத்ரயம் பூஜித்து இண்டை சாத்தி புஷ்பமாலை அணிவித்து மணியடித்து தூப தீபம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்து மனோரதமுத்ரை காண்பிக்கவேண்டும்.

இரு கரங்களையுங் கூட்டி இருகை விரல்களையும் எதிர்முகமாகச் செருக்கிச் சுட்டுவிரல்களை நீட்டி இணைத்து அவைகளின் மேல் பெருவிரல்களை நீட்டிவைப்பது மனோரத முத்ரையாம்.

वामेवा दक्षिणेवापि स्थापनीया मनोन्मनी ।
देवसंमुख संयुक्ता द्विहस्तैक मुखान्विता ॥

— कामिकागमम्

இடது பாகத்திலோ அல்லது வலது பாகத்திலோ மனோன்மனியைப் பூஜிக்கவேண்டும். ஈச்வரனைப் பார்க்கும் முகமுள்ளவளாய் இரண்டு கைகளையுடையவளாய் அந்த மனோன்மணியை தியானிக்கவேண்டும். தனக்கு அபிமுகமாக இருக்கும்போது கீழ்புறத்தில் மனோன்மணியைப் பூஜிக்க வேண்டும். பிறகு பிரும்மாங்கங்களை லயாங்கங்களில் பூஜித்து போகாங்கங்களையும் பூஜிக்க வேண்டும். போகாங்கத்திற்கு எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டும் (அவகுண்டனம் அமிருதீகரணம் என்ற இரண்டு ஸம்ஸ்காரம் கிடையாது) பிரும்ம மந்திரங்களுக்கு தேனுமுத்திரை, பத்மமுத்திரை, திரிசூல முத்திரை மகரமுத்திரை. சிருங்முத்ரைகளையும், அங்கங்களுக்கு நமஸ்கார முத்திரையையும் காண்பிக்க வேண்டும்.

தேனுமுத்ரை:- வலக்கைச் சிறுவிரலால் இடக்கை அணி விரலையும் இடக்கைச் சிறுவிரலால் வலக்கை அணி விரலையும், வல நடுவிரலால் இடச் சுட்டுவிரலையும், வலச் சுட்டுவிரலால் இட நடுவிரலையும் நுனியோடு நுனி பொருந்தச் சேர்த்தால் பசுவின் நான்கு முலைக்காம்பு போன்ற தோற்றமுடையதாய் ஆகும். இது தேனுமுத்ரை என்றும், சுரபிமுத்ரை என்றும், அமிருத முத்திரை என்றும் பெயர்பெறும்.

பத்மமுத்திரை:- பிணித்த கைகளை விரித்து இரு பெருவிரல்களையும் நடுவில் வளைத்துத் தாமரைப் பொகுட்டுப் போலாகப் பிடித்து எட்டிதழ் போலாக மற்றைய விரல்களை வெவ்வேருகச் சிறிது வளைப்பது பத்மமுத்திரை.

திரிசூலமுத்திரை:- இரு கரங்களையுஞ் சேர்த்து விரல்களைக் கோத்தபின், பெருவிரல்களையும் நடுவிரல்களையும், சிறுவிரல்களையும் இணைத்து நீட்டுவது திரிசூலமாகும்.

மகரமுத்ரை:- திரிசூல முத்திரையில் சேர்ந்துள்ள சுட்டு விரல்களை நீட்டி வலச்சுட்டு விரலால் இட அணி விரலையும் இடச் சுட்டுவிரலால் வல அணி விரலையும் வளைத்துப் பிடிப்பது மகரமுத்திரை.

சிருக்குமுத்திரை :- மகர முத்திரையிற் பொருந்திய சிறு விரல்களிரண்டையும் உள்ளே வளைத்து நடுவிரலிற் றங்கும் படி நீட்டிப் பெருவிரல்கள் அச் சிறு விரல்களைத் தீண்டின் சிருக்கு முத்திரை.

நமஸ்கார முத்திரை :- பெரு விரல்கள் ஒன்றின்மே லொன்ருகப் பிணைய மற்றை விரல்களை நிமிர்த்திக் கரங்க ளிரண்டும் சேரச் சிரசில் அல்லது மார்பில் வைத்தல் நமஸ்கார முத்திரை.

பிறகு அநந்தன், முதலான வித்யேசர்களை இரண்டாவது ஆவரணத்திலும் நந்தி முதலான கணேசர்களை மூன்ருவது ஆவரணத்திலும், இந்திராதி லோகபாலர்களை நான்காவது ஆவரணத்திலும், வஜ்ரம் முதலிய ஆயுதங்களை ஐந்தாவது ஆவரணத்திலும் பூஜிக்கவேண்டும்.

பத்மதள நுனிகளில் வித்யேச்வரர்களையும் பீடகண்டத் தில் கணேசாதிகளையும், பீடபாதத்தில் லோகேசர்களையும் பிரும்ம சிலையில் அஸ்திரங்களையும் பூஜிக்கவேண்டும்.

இவ்வாறு போகாங்க பூஜையுடன் ஆவரண பூஜை முடித்து, லட்டுகம், அபூபம், வாழைப்பழம், பாயஸம், நெய், சர்க்கரை, சுத்தோதனம் முதலியவைகளையும் வாசனையுடன் கூடிய ஏலம் லவங்கம் பச்சைக்கற்பூரம் பத்திரி ஜாதிக்காய் தக்கோலம் கஸ்தூரியுடன் பன்னீர்விட்டு அறைத்து கோள மாகச் செய்யப்பட்ட முகவாசத்தையும் அர்ப்பணம் செய்து ஆரூர்த்தி, தர்ப்பணம், சத்ரம், சாமரம், வ்யஜனம், தாளவிருந் தம் முதலியவைகளுடன் கூடிய உபசாரங்களால் இறைவனை சந்தோஷிக்கச் செய்யவேண்டும்

கற்பூரஹாரத்தி செய்து பஸ்ம ரக்ஷை செய்யவேண்டும். பஸ்மரக்ஷை என்பது வலது கையினுல் விபூதியை எடுத்து சிவனுடைய சிரஸில் மூன்று தடவை சுற்றி, கற்பூரத்தின் மேல் போடவேண்டும். இது கல்பசித்தமான விபூதியால் செய்யவேண்டும் இதனுல் ராக்ஷஸர்களின் நிவாரணமாகும்.

( தொடரும் )

# மண் சுமந்த மதுரை

## திரு. என். இராமகிருஷ்ணு

மாணிக்கவாசகர் கொண்டுவந்த குதிரைகள் நரிகளாகிக் கட்டை அவிழ்த்துக்கொண்டு கிளம்பிவிட்டன. மக்களேயும் மற்றைக் குதிரைகளையும் கடித்துக் குதறின. இரவெல்லாம் ஊர் அலங்கோலப்பட்டது. விடிந்தவுடன் அரசனிடம் செய்தியை எடுத்துரைத்தார்கள். பாண்டியனுக்குச் சினம் உண்டாயிற்று. வாதவூரரைக் கள்வன் என்று கூறினன். அவரை உடனே தண்டித்துப் பொருள் முழுவதையும் வாங்கும்படி, கட்டளை யிட்டான்.

மாணிக்கவாசகர் இறைவனின் மாயத் திருவிளையாடலை எண்ணி மனம் வாடினர். தண்டனை தாங்காமல் இறைவனை நோக்கிக் கதறத் தொடங்கினர்.

நாதவோ ! நாதமுடிவிறந்த நாடகஞ்செய்
பாதவோ ! பாதகனும் என்னைப் பணிகொண்ட
வேதவோ ! வேதமுடிவின் விளைந்த தனிப்
போதவோ ! போத நெறிகடந்த பூரணவோ !

( திருவிளையாடற் புராணம் )

இவ்வாறு தன் அன்பர் கதறவே அவருடைய பெருமையை உலகத்துக்கு வெளிப்படுத்தவேண்டி இறைவன் வைகையாற்றில் வெள்ளம் பெருகும்படி செய்தான் இயற்கையாக உள்ள கரையை உடைத்துக்கொண்டு வெள்ளம் எங்கும் பரவத் தொடங்கியது. நகர் முழுவதும் உள்ளவர்கள் என்ன செய்வதென்று தடுமாறும் அரசன் அமைச்சரை அழைத்து வெள்ளத்தைத் தடுப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யும்படிக் கட்டளையிட்டான்.

கூலியாட்களை வருவித்து வேலையைச் செய்வித்தார்கள். அரசாங்க ஊழியர்கள் மேற்பார்வை செய்தார்கள். ஊரில் உள்ள ஒவ்வொருவரும் இன்ன இன்ன இடத்தில் கரையை உயர்த்த வேண்டும் என்று அளந்து வரையறை செய்தார்கள்.

அந்த ஊரில் மூத்துப் பழுத்த கிழவி ஒருத்தி இருந்தாள். அவளை வந்தி என்று அழைப்பார்கள். அவள் தினமும் பிட்டு சுட்டு முதலில் சொக்கநாதனை நினைத்து நிவேதனம் செய்து பிறகே வியாபாரம் செய்வாள். இந்த வந்திக்கும் அரசினர் எல்லை கோலிக் கொடுத்துக் கரை போடும்படிச் சொன்னார்கள். அவள் பங்கை அடைக்கக் கூலியாள் கிடைக்கவில்லை. அவள் சொக்கநாதனைப் பிரார்த்தனை செய்தாள். இறைவன் வந்திக்குத் துணை செய்யும் பொருட்டுக் கூலியாளாகப் புறப்பட்டு வந்தான். வந்தி அவனைப் பார்த்து தன் பங்கை அடைத்துத் தரும்படி கேட்டாள். அவள் "நீ என்ன கூலி கொடுப்பாய்" என்று கேட்டான்; பிட்டு தருவதாகச் சொல்ல அதற்கு அவனும் ஒப்புக் கொண்டான். முதலில்பிட்டைத் தின்றுவிட்டுவேலைசெய்வதாகக் கூறினன். வந்தி பிட்டைக் கொடுக்க கூலியாள் அதைத் தின்று வந்தியை வாழ்த்தினன்.

"எனக்கு அம்மாவும் இல்லை அப்பாவும் இல்லை. கூலி வேலை செய்யவந்த எனக்குத் தாயாக நின்று களைப்பைப் போக்கினய். இதோ வேலை செய்யப் போகிறேன்" என்று சென்ருன். தான் வந்தியின் ஆள் என்று பதிவு செய்து கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தான். ஆனல் ஒழுங்காக வேலை செய்யவில்லை, பொழுதைப் போக்கிக்கொண்டு வந்தான். பின்பு கூடையைத் தலைக்கு வைத்துக்கொண்டு துயில ஆரம்பித்தான். பின்பு களைத்தவன்போல் நடித்து மீண்டும் பிட்டு வாங்கித் தின்பான்.

அரசனுடைய ஏவலாளர்கள் வேலை சரியாக நடைபெறுகிறதா என்று பார்க்க வந்தனர். வந்தியின் பங்கு சரியாக அடைபடாமல் இருந்தது. வேலை செய்பவனைக் கூப்பிட்டுக் கேட்டார். அவன் பதில் சொல்லவில்லை. அவனுடைய மேனி வண்ணத்தில் கூசி அவனை அடிக்கப் பயந்தார்கள். அரசனிடம் சென்று முறையிட்டார்கள். பாண்டியன் நேரில் வந்து பார்த்தான். அங்குள்ளவர்கள் அவனை இழுத்து வந்து அரசன் முன்பு விட்டார்கள். பாண்டியன் சினம் கொண்டு பிரம்பால் அவன் முதுகில் அடித்தான்.

பாண்டியன் அடித்த அடி அவன் முதுகிலேயே பட்டது; அவன் மனைவிமார்மேலும் பட்டது, வந்தியின்மேலும் பட்டது. யானை, குதிரை, மற்றும் எல்லார்மேலும் விழுந்தது. எல்லோரும் "அடி என்மேல் பட்டது என்மேல் பட்டது" என்று சொல்லிக் கொண்டார்கள். சோமசுந்தரக்கடவுள் எல்லா உயிரும் தாமே என்பதையும், அன்பிற்கு எளியர் என்பதையும் அனைவருக்கும் காட்டி, ஒரு கூடை மண்ணைக்கொட்டி, கரையை உயர்த்தி மறைந்

தருளினுன். அரசனுடைய ஏவலர் வந்தியிடம் சென்று அவளைத் துன்புறுத்தி அரசனிடம் வருக என்று கூறினர். வந்தி தன் ஆள் என்னசெய்தானே என்று கருதிச் சோமசுந்தரக்கடவுளை நோக்கி நின்று வருந்தினுள். திருவருளால் சிவகணங்கள் விமானத் தோடு வந்து அழைத்துச்சென்றனர்.

அப்போது அசரீரியாகச் சிவபெருமான் கூறினுர்:- அரசனே! "உன் செல்வம் புனிதமானது. அதனை வாதவூரன் நமக்கு உதவினுன். அதனை அறியாமல் நீ அவனை வருத்தினுய். நரிகளை எல்லாம் குதிரைகளாக நாமே கொண்டுவந்தோம். நீ மறுபடியும் அவனைத் தண்டித்தாய். அதைப் பொருமல் வைகையில் வெள்ளம் வரச்செய்தோம். வந்திக்கு ஆளாக வந்து பிரம்படி பட்டதும் நாமே. நீ அவனை விருப்பம்போல் விட்டுச் செங்கோலோச்சுக" என்று கூறினுர்.

மன்னன் அச்சமும் உவகையும் கொண்டான். மணிவாசகரைத் தேடி ஓடினுன். தான் செய்த பிழைகளைப் பொறுத்தருளி முன்போலவே புவி அனைத்தையும் ஆட்சிசெய்ய வேண்டு மென்று வேண்டினுன்.

மாணிக்கவாசகர் புன்னகை பூத்தார் "உம்மைச் சார்ந்தமையால் எனக்கு உலகியலும் வேத நீதியும் தெரிந்தன. சிவபக்தி உண்டாயிற்று. இறைவன் திருவருள் கிடைத்தது. எம்பெருமான் தில்லைக்கு வரும்படிப் பணித்துள்ளான், சென்று வருகிறேன் என்று விடைபெற்ருர்.

மதுரையில் உள்ள வீதிகள் இறைவன் திருவிழாக்களை நினைப்பூட்டும். ஆவணி மாதத்தில் பிட்டுத் திருவிழா நடைபெறும். கோவில் சுவர்களில் திருவிளையாடற் புராணச் சுதைச் சிற்பங்கள் பல உள்ளன. மண்டபத்தில் உள்ள தூண்களிலும் சிற்பங்கள் உள்ளன. இறைவன் கூலியாளாக வருவதுபோல் சிலை உள்ளது. மண்சுமந்து நிற்கும் காட்சி அழகாக உள்ளது. பக்கத்தில் பாண்டிய மன்னனும் வந்தியும் உள்ளார்கள். அரசன் அண்ணாந்து பார்க்கின்ருன். நாடாளும் மன்னவனுனாலும் இறைவன்முன் சிறியவனே என்ற கருத்தை அந்தச் சிற்பம் நன்கு புலப்படுத்துகின்றது.

ஆவணி மூலத்தன்று பிட்டுத் திருவிழா மதுரையில் நடைபெறுவதுபோலத் தருமையிலும் நடைபெறும். மூன்று நாள் நடைபெறும் விழாவின்போது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிறந்த தமிழ்ப் புலவர் ஒருவருக்குப் பட்டமளித்து ஆசி வழங்குவார்கள். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக இச் சிறப்புப் பணி தருமையில் நடைபெற்றுவருகின்றது.

# செய்திகள்

**தருமையாதீனத்தில் ;**

## மகாகயிலாயக் காட்சி
## பதினைந்தாவது ஆண்டு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இமயத் தலங்களை வழிபட்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் சமயாசாரியர்களுள் ஒருவராகிய அப்பர் சுவாமிகள் கயிலைக் காட்சி கண்டு மகிழ்ந்த ஆடி அமாவாசையன்று, தாமும் திருக்கயிலாய தரிசனம் செய்தருளினார்கள். அதன் நினைவாக இவ்விழா தருமையில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில் 19—7—74 வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசையன்று மகாகயிலாயக் காட்சி பதினைந்தாவது ஆண்டுவிழா சிறப்பாக நிகழ்ந்தது. அன்று காலை, மாலை இருவேளைகளிலும் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் வழிபட்டு, பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். பண்ணிசை வாணர்களால் திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயணமாக நிகழ்த்தப்பெற்றது.

அன்று மாலை 6 மணியளவில் வித்துவான், திரு. இரா. செல்வக்கணபதி தருமையாதீனத் தமிழ்ப் புலவர்களாகிய திரு. வி. சா. குருசாமிதேசிகர், திரு. சா. சிங்காரவேலன், திரு. வி. சபேசன் ஆகியோர் முறையே திருமலைச்சருக்கம்", "திருக்கயிலாய ஞானவுலா", கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி" ஆகிய தலைப்புக்களில் விரிவுரையாற்றினார்கள்.

இரவு வெள்ளி ரதத்தில் திருக்கயிலாயப் படத் திருவுருவத் திருவீதியுலா, பண்ணிசைவாணர்களின் கயிலைத் திருப்பதிகப் பாராயணத்துடன் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வீதியுலாவின்போது உடன் எழுந்தருளி, அருட்காட்சி வழங்கினார்கள். சைவ அன்பர்களும் பெருமக்களுமாகப் பலர் வந்து கலந்துகொண்டு தரிசித்துப் பிரசாதம்பெற்று உய்ந்தனர்.

## மாணிக்கவாசகர் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் 24—6—74 திங்கட்கிழமையன்று

சைவசமயாசாரியர்கள் நால்வருள் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை 9 மணியளவில் சமயாசாரியர்களுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெற்றன. இரவு மாணிக்க வாசகர் புறப்பாடாகி, பிராகாரத்தில் வலம்வருதல் நிகழ்ந்தது. ஆதீன ஓதுவாமூர்த்திகள் திருவாசகப் பாராயணம் நிகழ்த்தினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். தருமையாதீனப்புலவர்களாகிய திரு சி. அருணைவடிவேல்முதலியார் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. சொ. சிங்காரவேலன் ஆகியோர் "மாணிக்கவாசகர் வரலாறு" "திருக்கோவையார்" "திருவாசகம்" ஆகிய தலைப்புக்களில் விரிவுரை நிகழ்த்தினர் அன்பர்கள் அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமித் திருக்கோயிலில் சைவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா 26—7—74 வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நிகழ்ந்தது; காலை விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணம் ஆதீன ஓதுவாமூர்த்திகளால் படிக்கப்பெற்றது. இரவு வெள்ளையானை வாகனத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் குதிரை வாகனத்தில் சேரமான் பெருமாள் நாயனாரும் எழுந்தருள திருவீதியுலா நிகழ்ந்தது. அவ்வமயம் பண்ணிசைவாணர்களால் தக்க பக்கவாத்தியங்களுடன் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தப்பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப் புலவர்கள், அற்புத விளக்கச் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கியருளினார்கள்.

### தருமையாதீனத் திருக்கோயில்களில்

## ஆடிப்பூர மகோற்சவம்

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ வேளூர் வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகையம்பாளுக்கு ஆடிப்பூர மகோற்சவம் 14—7—74 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. 14—7—74 அன்று கொடியேற்றமும் 22—7—74 அன்று திருத்தேர்த் திருவீதியுலாவும் 23—7—74 அன்று சித்தா

மிர்த தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் சிறப்பாக நிகழ்ந்தன. 23—7—74 அன்று ஆடிப்பூரம்; அன்று வெள்ளி இரதத்தில் திருவீதியுலா நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் வந்து தரிசித்து உய்ந்தார்கள்.

**சீகாழியில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலைநாயகியம்பாளுக்கு ஆடிப்பூர மகோற்சவம் சிறப்பாக நடந்தது. 14—7—74 ஞாயிறன்று தொடங்கி 10 நாட்கள் விழா நடைபெற்றது. 22—7—74 திங்கட்கிழமை திருத்தேர்த் திருவீதியுலாவும் 23—7—74 செவ்வாய்க்கிழமை ஆடிப்பூரத் தீர்த்தங் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. பக்தர்கள் பலர் வந்து வணங்கி உய்ந்தார்கள்.

**திருக்கடவூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமியம்பாளுக்கு 14—7—74 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடிப்பூர மகோற்சவம் சிறப்பாக நடந்தது. 22—7—74 அன்று திருத்தேர்த் திருவீதியுலாவும், 23—7—74 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ அபிராமியம்பாள் அமிர்தபுட்கரணியில் தீர்த்தங் கொடுத்தருளலும் நிகழ்ந்தது. சைவமெய்யன்பர்கள் பலர் வந்து வழிபட்டு ஸ்ரீ அபிராமியம்பாளின் அருளுக்குப் பாத்திரமானார்கள்.

### குத்தாலத்தில்
## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினர் சார்பில் 26—7—74 வெள்ளிக்கிழமையன்று சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. காலையில் விசேஷ அபிஷேகமும் மாலையில் அலங்கார தீபாராதனைகளும் நடைபெற்றன. வார வழிபாட்டுக் கழகத் தலைவர் திரு. சி. ப. சிங்காரஞ் செட்டியார் "சுந்தரரின் அருள் வரலாறு" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். நாதஸ்வர இன்னிசையுடன் தொடங்கிய விழா திருமுறைக் கச்சேரியுடன் நிறைவுற்றது. செயலர் நன்றி நவின்றார். பின்னர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிராகாரத்தில் வலம்வர அன்பர்கள் தரிசித்துப் பிரசாதங்கள் பெற்று மகிழ்ந்தனர்.

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஆனந்தஹு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய )
( 17—7—74 முதல் 16—9—74 முடிய )

ஸ்ரீ ஆனந்தஹு ஆவணிமீ - 1உ ஸ்திரவாரம் உதயாதி முதல் 3 நாழிகை 56 விநாடிக்கு ஸ்ரீ சூரிய பகவான் சிம்மராசி சங்கிரமமாக சிம்ம லக்கினத்தில் ஆவணிமாதப் பிரவேசம் செய்கிறார். மாதசங்கிரம வாராதிபதி சனீஸ்வரன் மேகாதிபதியாகி லக்கினத்துக்கு 11ல் குருபகவான் வீட்சண்யத்துடன் இருக்கிறார். இதன் பலன் உலக சுபிட்சத்தின்பொருட்டு மேற்குத் திக்கில் நீலநிறமேகங்கள் உற்பத்தியாகி எங்கும் பரவலாக மழை பெய்யும். சுபிட்சம் உண்டாகும். சஸ்ய தானிய விருத்திக்கு பிரஜைகள் சுறுசுறுப்புடன் உழைத்து வருவார்கள். அரசாங்கம் மனுநீதி வழங்கி பிரஜைகளுக்கு நன்மை செய்யும். தருமஸ்தாபனங்கள், மடாலயங்கள் ஆஸ்திக சங்கங்கள் சிறந்து ஓங்கும். எங்கும் சுபிட்சம் ஏற்படும்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மத்திம பலனைத்தரும். 2 ஆம் அதிபதி சுக்கிரன் சதுர்த்தகேந்திரம் பெற்றார். தனவசதி கௌரவமாக இருந்துவரும். இஷ்டர்களுடன் இஷ்ட போஜன சௌக்கியம் ஏற்படும். உடலில் உஷ்ண வாதத்தால் அஜீர்ணம் காது மந்தம் ஏற்பட்டுக் குணமாகும். பூர்வபுண்ணியஸ்தானாதிபதி ஆட்சியிலிருந்து தர்மாதிபதியின் பார்வை பெற்றதால் எல்லாப் பாக்கியங்களும் சிறந்துவிளங்கும். விவாத வழக்குகளில் ஜெயானுகூலங்களை உண்டாக்கும். தொழில் அல்லது உத்தியோகம் சிறப்புடன் நடந்துவரும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். தன வசதியற்றது போல் இருந்தாலும் தக்க சமயத்தில் பொருள்

வரவு ஏற்படும். வாக்கு நேர்மையை வலியுறுத்தலால், பிறர் மனம் கசக்குப்படி இருக்கும். மனைவி புத்திரர்களுக்கு உஷ்ண வாத நோய் கண்டு குணமடையும். உத்தியோகம் அல்லது தொழிலில் இம்மாதம் 17உக்கு மேல் திருப்தியான நிலைமை ஏற்படும். புதிய ஸ்தானம் ஏற்படும். கௌரவம், தன்மதிப்பு மேலானதாக இருக்கும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுப பலனைத் தரும். தனம், பாக்கியம் விருத்தியடையும். இம்மாதம் 13உக்கு மேல் எழுத்துத் துறையில் புகழைக் கொடுக்கும். சகோதரர்கள் ஒற்றுமையாக இருப்பார்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். பெற்றோருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுக் குணமாகும். மாதா அல்லது ஸ்திரீ வகையில் ஓர் சொத்து பாத்தியதை வரவு ஏற்படும். தொழில் அல்லது உத்தியோகத்தில் அதிக பிரயாசையை உண்டுபண்ணும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத் தரும். தனம், திரவியம் சிறப்பாக இருக்கும். சகோதரகாரகனும் ஸ்தானாதிபதியும் சுபர், பாவர் பார்வை பெற்றதால் சகோதரருக்கு உஷ்ணவாத நோயும் வாழ்வில் சில சங்கடங்களும் ஏற்பட்டு இம்மாதம் 14உக்கு மேல் சௌகரியமும் கஷ்ட நிவர்த்தியும் ஆகும். சுக்கிரன் நிலைமையால் வாகனம், வஸ்திரம், கட்டட பிராப்திகளை மேலானதாக்கும். வெளியூரில் பொருட்செலவு ஏற்படும். அரிய காரிய சித்தியை உண்டாக்கும். இம் மாதம் 18உக்கு மேல் தொழில் ஸ்தானாதிபதி நல்ல நிலைமையடைந்து குரு சுயாங்கிசம் பெறுவதால் தொழில் அல்லது உத்தியோகத்தில் மேலும் சிறப்பை உண்டாக்கும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுப பலனைக் கொடுக்கும். 2க்குரிய புதன் 17உக்கு மேல் நல்ல நிலைமையில் வருவதால் பொருள் வரவு, தானுக தாளுக உண்டாகும். ஒப்பந்தம் அல்லது லிகிதமூலமான சிக்கல் நீங்கும். 3க்குரிய சுக்கிரன் நிலையால் சகோதர வழியில் ஓர் சுபச்செலவு ஏற்படும். வாகனுதிபதி சுபர், பாவர் பார்வைபெற்றதால் வாகனத்தில் ஓர் செலவு உண்டுபண்ணும். ஆயினும் வாகனபலன் உண்டு புத்திரர், மனைவி இவர்களின்

சௌக்கியம் மேலானதாக இருக்கும். தொழில் அல்லது உத்தி யோகத்தில் அலைச்சலாக இருக்கும். ஆயினும் காரியத்தில் மேன்மை ஸ்திதி ஏற்படும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைக இருக்கும். தனம் பாக்கியம் உண்டாகும். இருப்பிடம் மாறும். திருதிய ஸ்தானாதிபதி லக்கினாதிபதி சேர்ந்தும் சுபர், பாவர் பார்வை பெற்றும் இருப்பதால் சிந்தை குழப்பமாகவும் அதைரியமாகவும் இருக்கும். இம்மாதம் 18உக்கு மேல் சிந்தை குழப்பம் நீங்கும். தெய்வ பிரார்த்தனையால் வல்லமையை உண்டாக்கும். புத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருக்கும். கணவன் மனைவிக்குச் சற்று சச்சரவாக இருக்கும். தொழிலில் அதிக சிரமம் இருப்பி னும் இம்மாதம் பிற்பகுதியில் சிரமம் நீங்கி நற்பலனை உண் டாக்கும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுப பலனைக் கொடுக்கும் தனாதி பதி செவ்வாய் பலமாக இருப்பதால் பொன் பொருள் வரவு உண்டாகும். சிவந்த வஸ்துவின் லாபம் உண்டாகும். ஒப்பந்த பத்திரங்களில் இருந்துவந்த சிக்கல் இம்மாதம் 13உக்கு மேல் நீங்க வழி உண்டாகும். ஆபரணங்கள் சேர்க்கையும் சகோதர வழியினர் முன்னேற்றமும் ஏற்படும். பழைய வீடு வாங்கித் திருத் தும் முயற்சியிலும் யந்திரம் வாங்குதல் முதலியவற்றிலும் பொருள் முதலீடு செய்ய நேரும். புத்திரர்களின் நலம் அந்தஸ்து சிறப் பாக இருக்கும். இம்மாதம் பெண் மகவு உற்பத்தியாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நிம்மதியான நிலைமை யும் சுகஜீவனமும் இருந்துவரும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைக இருக் கும். 2க்குரிய குரு இம் மாதம் 17உ க்கு சுயாங்கிசம் பெறுவ தால் தனவசதி சரளமாக இருந்துவரும். சகோதர ஸ்தானாதி பதி சுபர் வீட்சணம் பெற்று இருப்பதால் சகோதர குடும்பம் சிறப்பாக விளங்கும். மாதா ஸ்தானம் ஷஷ்ட, அஷ்டமாதி பதிகள் பார்வை பெற்றதால் தாய்க்கு ரத்தக்கொதிப்பு அல்லது விபத்து வந்து நீங்கும். பந்து மித்திரர்களின் நலனுக்கு ஈடு படுதல் ஆகும். சில சமயங்களில் மனோவேகமும் அதனால் மன சங்கடமும் ஏற்பட்டு நீங்கும். அதிக முயற்சியின்பேரில் காரிய சித்தியை உண்டாக்கும். கேட்டை நான்கு பாதங்களுக்கு மாத்

திரம் மத்திம பலனை நடந்துவரும். இம்மாதம் 18, 19 ஆந் தேதிகளில் வயிற்றில் எரிச்சல், அஜீர்ணம் வந்து நீங்கும். இந்த ராசி ஸ்திரீகளாயின் சூதகவலியோ அல்லது மாதவிலக்கோ ஏற்படும். தொழிலில் ஸ்திர நிலைமை இருந்துவரும். அரசாங்க கௌரவம் ஏற்படும். ஆயினும் சிலர் அபிப்பிராய பேதங்களால் மன அயர்வைக் கொடுத்து நீக்கும்.

## 9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். தன வசதி பிரபலஸ்தர்களால் ஏற்படும். ஆயினும் வறுமைபோல் இருந்து வரும். சகோதரர்களின் கல்வி தொழில்களில் முன்னேற்றம் காணும். ஆனால் சகோதர குடும்பத்தில் சச்சரவும் மனகுழப்பங்களும் இருக்கும். பெற்றோருக்கு ரத்த பித்த மயக்கம், கண்டங்கள் நேரிடும். இராசிக்கு அம்மான் குடும்பம் மேன்மையுறும். இம்மாதம் 18உ வரையில் குழப்பமான நிலைமையாய் இருந்து வரும். உடலில் நீர் சம்பந்த நோய் கண்டு நீங்கும். சொத்து விவகாரங்களில் சில சிக்கல்கள் உண்டாகும். தஸ்தாவேஜுகள் நிருபணர்த்தங்கள் முதலிய முஸ்தீப்புகளில் அலைச்சலும் காரியதாமதமும் ஆகும்.

## 10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபபலனைத் தரும். தனபிராப்தி இருவகையில் இருந்து வரும். குடும்பத்தில் சுப மங்களம் ஏற்படும். சகோதர குடும்பம் மேன்மையுடன் விளங்கும். வாகனாதிபதி செவ்வாய் 8-ல் இருப்பதால் வாகனத்திலிருந்து தவறி விழுதல் கை கால் வாயு பிடிப்பு முதலிய உபாதைகள் ஏற்பட்டு குணமாகும். புத்திரர்களின் படிப்பு, உத்தியோகம் சிறப்புற்று விளங்கும். பாக்கியாதிபதி புதன் சனீஸ்வரன் பார்வைபெற்றும் அதங்கம் அடைந்தும் இருப்பதால் ஒப்பந்த லேவாதேவி அல்லது கொடுத்தல் வாங்கல்களில்; சில சச்சரவுகளுடன் கணக்கு தீர்த்தல்; கை கூடுதல் ஏற்படும். உத்தியோகத்தில் நல்ல நிலைமை இருந்து வரும். சௌக்கியத்தை உண்டாக்கும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ - சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். 2க்குரிய குரு வக்கிர கதியில் இம்மாதம் 17உ தனஸ்தானத்தில் சுயாங்கிசம் பெறுவதால் பொன் பொருள் கண்யமான வகையில் வரவு ஆகும். லக்கின விரயாதிபதியும் திருதிய கன்மாதிபதியும்

பார்ப்பதால் இரத்த சம்பந்தபட்டவரால் சமசெலவை உண்டு பண்ணும். திருதியாதிபதி செவ்வாய் சனியின் பார்வைபெற்றதால் சகோதரருக்கு ஓர் மாற்றமான நிலை அல்லது மன சங்கடம் இருக்கும். மாதா ஸ்தானத்தில் கேது இருந்து அதுவும் மாதா தானதிபதியுடன் அங்கிசை பெற்று இருப்பதால் மாதாவிற்கு உடல்நலம் பாதிக்கச் செய்யும். புத்திரர் மனைவி நலமுடன் இருப்பார்கள். தொழில் அல்லது உத்தியோகத்தில் சாதாரண நிலைமையாக இருக்கும்,

## 12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் சுப பலனாக இருக்கும். 2, 9க்குரிய செவ்வாய் பலத்துடன் இருப்பதால் தனவசதி நன்றாக இருக்கும் திடதைரியமும் சமாளிக்கும் சக்தியும் ஏற்படும். வீடு வாகன விஷயத்தில் கொஞ்சம் சிரமம்போல் இருந்துவரும். ஆயினும் நன்மையாகவே இருக்கும். புத்திரர் மனைவி சுகமுடன் இருப்பார்கள். ஆயினும் மனநிம்மதி இல்லாமல் இருக்கும், இம்மாதம் 18வக்குமேல் சந்தோஷ நிலைமையை ஏற்படுத்தும். பெண் மகவு உற்பத்தியாகும். தர்மகர்மாதிபதிகளின் நிலைமையால் இம்மாதக் கடைசியில் தட்ட முடியாமல் சற்றே சச்சரவுடன் ஓர் சுபகாரியச் செலவு நேரும்.

### அற்புதத் திருக்கோயில்

சிதம்பரம் - வடலூர் சாலையில் பின்னலூர் என்ற ஊர் உள்ளது. அங்கு ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ இராமலிங்கேசுரர் திருக்கோயில் உள்ளது. புராதன காலத்திய திருக்கோயில் இது. திருக்கோயில் சிறு மலைக்கோயிலாகக் காட்சி அளிக்கின்றது. பூமி மட்டத்திலிருந்து சுமார் 15 அடி உயரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. 12 படிகள் உள்ளன.

சிவலிங்கப் பெருமானின் "பாணம்" சுயம்புமூர்த்தி; சிறுமலையின் சிகரமே பாணமாகக் காட்சியளித்து வருகின்றது; சிவலிங்கப்பெருமான் அடியில் சுமார் 20 அடி தோண்டியும் அடிப்பாகத்தைக் காணமுடியவில்லை.

ஆகவே இத்திருக்கோயில் ஓர் அற்புதத் திருக்கோயிலாக விளங்கிவருகின்றது.

மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்.